# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 31.

### உபவாசம்.

தானிய உணவையும் பாலையும் திருத்தி பழங்களை உட்கொள்ள ஆரம்பித்த பொழுது தன்னடக்கம் பெறுவதற்குரிய ஒரு வழியாகக் கருதி உபவாசமிருக்க ஆரம்பித்தேன். ஸ்ரீ காலன் பாக்கும் இதில் என்னுடன் கலந்து கொண்டார். சரீர சௌக்கியத்தைக் கருதி மாத்திரம் நான் அடிக்கடி உபவாசமிருந்து வந்தேன். தன்னடக்கத்துக்கு உபவாசம் இன்றியமையாததென்பதை ஒரு நண்பர் மூலமாகத் தெரிந்து கொண்டேன். வைஷ்ணவ குடும்பத்தில், அதிலும் கடுமையான விரத அனுஷ்டானங்களுள்ள தாயாருக்குப் பிறந்தவனுகையால், நான் இந்தியாவிலிருந்த பொழுதே ஏகாதசி போன்ற உபவாசங்களை அனுஷ்டித்து வந்தேன். ஆனல் எனது தாய் தந்தையரைத் திருப்தி படுத்துவதற்காகவே நான் அப்படிச் செய்யவேண்டி யிருந்தது. உபவாசத்தின் நன்மையை நான் அப்பொழுது அறிந்துகொள்ளவுமில்லை. எனக்கு அதில் நம்பிக்கையும் இடையாது. ஆனல், நான் மேலே குறிப்பிட்ட நண்பர், பிரமச்சரிய விரதத்தைக் காப்பதற்காக உபவாசமிருந்து வந்ததைப் பார்த்து நானும் அவரைப் பின்பற்றி ஏகாதசி உபவாசத்தை மேற்கொண்டேன். உபவாச தினங்களில் ஹிந்துக்கள் வழக்கமாகப் பாலும் பழமும் சாப்பிடுகிறார்கள். ஆனல் அவைகள்தான் எனக்கு தினசரி உணவாக இருந்து வந்தன. ஆகையால் நான் தண்ணீர் மாத்திரம் உட்கொண்டு பூரண உபவாசமாக இருந்து வந்தேன்.

நான் இந்தத் திட்டத்தை ஏற்படுத்திக் கொண்ட பொழுது அந்த மாதம் அகஸ்மாத்தாக ஹிந்துக்களுக்குசிராவண மாதமாகவும், முஸ்லீம்களுக்கு ரம்ஸான் மாதமாகவும் சேர்ந்தது. எங்கள் வம்சத்தார்கள் வைஷ்ணவ விரதங்களைப் போலவே ஸைவ விரதங்களை அனுஷ்டிப்பதும், ஸைவ ஆலயங்களுக்குப் போவதும் வழக்கம். எங்கள் குடும்பத்தார் சிலர் சிராவண மாதத்து பிரதோஷ விரதம் அனுஷ்டிப்பதுண்டு. நானும் அப்படியே செய்வதெனத் தீர்மானித்தேன்.

இந்த முக்கியமான அனுஷ்டானங்களை ஏற்றுக்கொண்ட பொழுது நானும் ஸ்ரீ. காலன் பாக்கும் குழந்தைகளுடன் வசித்து வந்த சில சத்தியாக்கிரஹக் குடும்பத்தாரும் டால்ஸ்டாய் பண்ணையில் வசித்து வந்தோம். இந்தக் குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருந்தோம். அதில் நாலைந்து முஸ்லிம் பையன்களும் படித்து வந்தார்கள். அவர்களுடைய மதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுகும்படி அவர்களுக்கு நான் அடிக்கடி கூறிவந்தேன். அவர்கள் தினசரி தொழுவதைக் கவனித்து வந்தேன். எங்களுடன் பார்ஸி, கிறிஸ்தவ மத இளைஞர்கள் பலரிருந்தனர். அவர்களையும் தங்கள் தங்கள் மதக் கோட்பாட்டின்படி நடக்குமாறு சொன்னேன். ஆகையால் இந்த மாதத்தில் ரம்ஸான் உபவாசமிருக்கும்படி முஸ்லிம் வாலிபர்களைத் தூண்டினேன். நான் பிரதோஷ விரதமேற்றுக் கொண்டேனுகையால், ஹிந்து, பார்ஸி, கிறிஸ்தவ வாலிபர்களை என்னுடன் சேர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். தன் மறுப்பு சம்மந்தமான காரியங்களில் மற்றவர்களுடன் சேர்ந்து கொள்வது நல்லதென்று அவர்களுக்கு விளக்கினேன். முஸ்லிம் வாலிபர்களோ சாப்பிடுவதற்கு சூரிய அஸ்தமனம் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. மற்றவர்களுக்கு அப்படியில்லை. ஆகையால் மற்றவர்கள் அவர்களுக்கு வேண்டிய ருசியான ஆகாரங்களைத் தயார்செய்து வைத்தனர். காலையில் சூரிய உதயத்துக்கு முன் முஸ்லிம் வாலிபர்கள் சாப்பிடும் பொழுதும் மற்றவர்கள் கலந்துகொள்வதில்லை. உபவாச தினங்களில் முஸ்லிம்களைத் தவிர மற்றவர்கள் தண்ணீர் மாத்திரம் சாப்பிடுவார்கள்.

முழு உபவாசத்தாலும், அரை உபவாசத்தாலும் உண்டாகும் நன்மைகளை இந்த வாலிபர்கள் உணர்ந்தார்கள். டால்ஸ்டாய் பண்ணையில் நாங்கள் எல்லாரும் சாகவுணவுகளே உட்கொண்டு வந்தோம். எனது உணர்ச்சியை மதித்து இந்த உணவேற்றுக் கொள்ள சம்மதித்த அவர்களுக்கு எனது நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ரம்சான் காலத்தில் முஸ்லிம் வாலிபர்கள் மாமிச மில்லாமலே தான் சாப்பிட்டார்கள். ஆனல் அவர்கள் என்னிடம் அதைப்பற்றிக் கூறவே யில்லை. சாக உணவு அவர்களுக்குத் திருப்தியையும் ருசியையும் அளித்தது. அந்தப் பண்ணையில் கிடைத்த காய்கறிகளைக் கொண்டு ஹிந்து வாலிபர்கள் அவர்களுக்கு வேண்டிய ஆகாரத்தை தயார் செய்து வைத்தார்கள்.

இந்த சந்தோஷமான சம்பவங்களை நான் வேறிடத்தில் குறிப்பிட முடியாதாகையால் தான் உபவாசத்தைப் பற்றிய இந்த அத்தியாயத்தில் வேண்டுமென்றே குறிப்பிட்டேன். மேலும் நான் நல்லதென்று நினைத்துச் செய்கின்றவைகளை எனது கூட்டாளிகளும் செய்ய விரும்பும் எனது சுபாவத்தையும் மறை முகமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அவர்களில் ஒருவரும் அதற்கு முன் பூரா உபவாசமோ, அரை உபவாசமோ அனுஷ்டித்ததில்லை. ஆனல் உபவாசம் தன்னடக்கத்துக்கு ஒரு சாதனமாக இருக்கிற தென்பதை விளக்குவதற்கு, நல்ல வேளையாக ரம்ஸானும் பிரதோஷமும் வந்து சேர்ந்தன.

இந்த முறையால், எங்கள் குடியிருப்பில் தன்னடக்க உணர்ச்சி தானகவே வளர ஆரம்பித்தது. பண்ணையில் குடியிருந்த அனைவரும் இப்பொழுது எல்லா உபவாசங்களிலும் எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அது நன்மைக்கே என்று திடமாக நம்புகிறேன். இதனல் அவர்கள் என்ன உணர்ச்சி பெற்றனர் என்ருவது, சரீராபிமானப் போராட்டத்தில் எவ்வளவு தூரம் உதவியாக இருந்ததென்ருவது நான் கூற முடியாது. என் சம்பந்தப்பட்ட மட்டில், ஸ்தூலமாகவும், சூட்சுமமாகவும் எனக்கு மிகுந்த நன்மை யளித்ததாகவே நிச்சயமாக நம்புகிறேன். உபவாசமும், வேறு சில நல்லொழுக்கங்களும் எல்லாரையும் ஒரே நிலைமைக்குக் கொண்டு வருமென்ற கட்டாயமில்லை யென்பதை நான் அறிவேன். தன்னைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அனுஷ்டித்தால் மாத்திரம், உபவாசம் மிருக இச்சையைக் குறைப்பதற்குச் சாதகமாக விருக்கும்.

---

பூபதி—சோமு! நேற்று ஏகாதசி விழிப்புக்கொண்டனையா?

சோ—ஆமாம்; ஒரு விநாடி கூட நித்திரை கிடையாது.

பூ—யானுமப்படித்தான்.

சோ—நீயும் என்னைப்போல் விடியு மட்டும் சீட்டு விளையாண்டாயோ?

பூ—பைத்தியம்! இவ்விழிப்பு ஏகாதசிக்குப் புறம்பானதாகும்.

சோ—ஏன் அப்படிச் சொல்கிருய்? எப்படியும் உறக்கம் கிடையாதல்லவா?

பூ—ஏகாதசியன்று விழித்திருக்க வேண்டுமென்ற உண்மைத் தத்துவம் அறிய மாட்டினைபோலும். அன்று முழுதும் உறக்க மொழித்து பகவத் தியானத்தில் ஆழ்ந்திருக்கவேண்டும். இதற்காகவே பக்த குழாங்கள் பகவன் நாமத்தை யுச்சரித்து உஜ்ஜீவிக்க புராணம் வாசித்தல், திவ்விய காலக்ஷேபங்கள், பஜனைகள் முதலியன நடாத்துகிருர்கள். இக்காரியங்களை உன்போன்ருர் ஏதோ உறக்கம் போக்கும் வழிகளென மதித்து, தம் அறிவுக் கெட்டினமட்டில் சீட்டாட்டம், சதுரங்கம், ஆடல் பாடல் முதலியவைகளினுல் தூக்கம் போக்குகிருர்கள். இவ்வழிகளில் ஏகாதசிப் பெயரால் நித்திரை நீக்குவதைப் பார்க்கிலும் அன்று கும்ப [illegible]

# மாயவாழ்வு.

ஸ்ரீ அ. கு. அண்ணுமலை எழுதியது.

## 7-வது அத்தியாயம்.

(முன் தொடர்ச்சி)

ஐந்தாவ தத்தியாயத்தி னிறுதியில் கூறியபடி சத்தியநாதனை உத்தியோகஸ்தர் மன்ருடிக் கொண்டிருந்தார்.

சத்தி—நல்லது. ஆனல் ஜெயிலில் ஒரு வாலிப மைனர் இருக்கிருனு?

உத்தி—ஆம் இருக்கிருன். அவன் பெயர் மதி சுந்தரனும்.

சத்தி—சரி. அவனை ஏன் ஜெயிலி லடைத்தீர்கள்?

உ—தாசி கமலாம்பாள் வீட்டில் கதவைத் தட்டிக் கலகம் செய்ததற்காக.

ச—வாக்குமூல மென்ன கூறினுன்?

உ—முதலிலில்லை யென்ருன். பின் கோலினலடிபட்ட பின் குடி வெறியால் செய்ததாகவும், செய்தது தப்பித மென்றும் ஒப்புக்கொண்டான்.

ச—ஓகோ! நீங்கள் அவனை உடனேவிடுவிக்க வேண்டும்.

உ—ஆ! அப்படியே செய்கிறேன்.

உடனே சத்தியநாதனும் மனுவை வாபஸ் பெற்ருன். அதற்குப் பதிலாக மைனரையும் பெற்ருன். மைனர் மெலிந்து க்ஷய ரோகத்தின் நேசமும் பிடித்திருந்தார்.

சத்திய நாதனைக் கண்டதும் மைனர் தன்னை விடுவித்தது அவரே யென அறிந்து மகிழ்ந்தார். நிற்க,

கமலாம்பாள், கிழவி, போலீஸ் மூவரும் விசாரிக்கப் பட்டார்கள். மூவரும் தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என சத்தியம் செய்தார்கள். அவ் வுத்தியோகஸ்தர் சத்தியநாதனிடன் சொல்லியபடி இம் மூவர்களையும் கொலை செய்தவர்கள் உண்மை சொல்வார் களா வென்று கூறி தூக்கிலிட உத்தரவிட்டார். அந்தோ! பழி யோரிடம்; பாவ மோரிடம். கலியுக நியாயஸ்தலங்களின் நியாயம்தானென்னே! தன் தாய், கமலாம்பாள் வீட்டில் கொலை யுண்ட செய்தி சத்தியநாதனிடம் கேட்ட மைனர் மூர்ச்சித்து விழுந்து விட்டார். மைனரை சொந்த ஊர் கொண்டு போய்ச் சொந்த வீடு சேர்த்தனர். தாயைக் கொலை செய்த பாவி தான் என அறிந்தான், நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்ததெனக் கண்ணீர் விட்டுக் கதறினுன். கெட்ட சேர்க்கையின் பலனை எண்ணினுன். வாய் விட்டலறினுன். தான் தாயைக் கொலை செய்த விஷயத்தைக் கடைசிவரை வெளியாக்க வில்லை. பிறர் தாயின் மரணத்திற்காகத் துக்கப் படுகிருனென யெண்ணி யிருந்தார். நிற்க,

நாடக நண்பர் இருவரையும் சத்தியநாதன் வாரண்டில் பிடித்து அவர்கள் மைனரிடம் நோட் டெழுதி வாங்கி யிருந்த 1 லக்ஷம் ரூபாயும் வாங்கி விட்டதினுலும் கொலை செய்த காரணமாக கமலாம்பாள் வீடும் மற்றெல்லாமும் லக்ஷ்மியின் வார்சுக்குச் சொந்த மென நியாய ஸ்தலத்தில் தீர்ப்பானதினுலும் எல்லாம் மொத்தம் 2 கோடி ரூபாய் வந்தது. ஆனலிதை சத்தியநாதன் மைனரிடம் தெரிவிக்க வில்லை.

கடன்காரர் மைனரை ஹிம்ஸித்தனர். மைனருக்குத் தாய் கொலையால் அறிவு தட்டுப்பட்டது. அறியாமை விட்டது. இராம பாணம் பட்ட இராவணன் போல கடன்காரர்களிடம் மைனர் கலங்கினுன். முதலிலிருந்து பழைய கதையை பின் வருமாறு நல்லறிவோடு சிந்தித்தான். "தீய நாடகம் சென்றதால் தீயோர் நட்புக்கிடைத்தது. தூர்ச்சனர் நேசத்தை நேசித்ததால் குடி, விபசாரம், கொலை, களவு, பொய் முதலிய பஞ்சமா பாதகங்களையும் செய்தோம். க்ஷய ரோகம் என்ற கொடிய நோய்வாய்ப் பட்டோம். ஜெயில் வாசமும் பார்த்தோம். அந்தோ! தாய் வார்த்தைக்கு மீறினேம். பின் சண்டாளமாகத் தாயையும் கொன்ருேம். கடனென்னும் தீயில் விழுந்து கலங்கினேம். இவைகளுக் கெல்லா மடிப் படையான காரணம் தீயோர் கேண்மையன்ருே! கெட்டேன் ஈசா. தொட்டேன் தீச்செய்கை. பட்டேன் துன்பம். விட்டேனிது முதல் கெட்ட செய்கையை. அந்தோ! ஜெகதீசா! தாய் சொல் மீறிய பாவமோ! யாரிட்ட சாபமோ! நீ கொண்ட கோபமோ!".

பின்னுல் சத்தியநாதன் கடனெல்லா மடைத்து விட்டு ஒரு கோடி ரூபா யிருப்பதாக மைனரிடம் சொன்னுன். உடனே மைனர் சத்தியநாதன் முன்பாக தான் இனி தீய நாடகங்களுக்குச் செல்வதில்லை யென்றும், தீயோர் விஷ நட்பைக் கனவிலுங் கருதுவதில்லை யென்றும், தாய் சொல் மீறியது தப்பித மென்றும், பெரியோர்கள் வாக்கிற்கு மீறுவதில்லை யென்றும், குடி யெனும் சண்டாள இடியில் தலையை மறந்தும் கொடுப்பதில்லை யென்றும், தாசிகளைப் பற்றி மனதிலும் நினைப்பதில்லை யென்றும், கொலை யெனும் கொடூரப் பாதகத் தொழிலைச் செய்வதில்லை யென்றும், அழகைக் கெடுக்கும் களவை மறந்து விடுவே னென்றும், ஒழுக்கமுயர் குல மென்னும் நீதிப்படி சத்தியந் தவருது உத்தம வழி யேகுவதாகவும் வரவுக்கு மீறியும் அனுவசியமாகவும் செலவு என்றும் செய்வதில்லை யென்றும், நியாய ஸ்தலங்களில் நீதியில்லை யென்பதை பிரத்தியக்ஷ அனுபவத்திலும் பூரணமாய்க் கண்டு கொண்டபடியாலும், பணக்காரனுக்கும் சாமர்த்திய சாலிகளுக்குமே ஜெயங் கிடைப்பதாலும், உண்மைக்கும் நியாயத்திற்குமங்கு வேலை யில்லாததினுலு மினி நியாயஸ்தலங்களின் பக்கத்தில் கூட போவதில்லை யென்றும் பிரதிக்ஞை செய்து கொண்டான்.

நாடக நண்பர்கள் மைனரிடம் ஒரு லக்ஷம் ரூபால் பிராமிசரி நோட்டின் மேல் வாங்கி நாடக முதலாளிக்குக் கொடுக்க நாடக கம்பெனி நொடித்துப் போனதால் அந்த லக்ஷம் ரூபாயையுமிழந்தார்கள். இந் நாடகத்தில் முன்னலேயே கஷ்டத்துடன் க்ஷேமித்து வைத்திருந்த இரு லக்ஷ ரூபாய்ச் சொத்தை சத்தியநாதன் மைனருக்காக சப்தி செய்து ஏலம் போட்டு லக்ஷ ரூபாய்க்கு விற்று சர்க்கார் மூலமாய்ப் பெற்றுக் கொண்டது முன்னே கூறப்பட்டிருக்கிறது. மோசத்திற்குட்பட உள்ளதும் போய் பள்ளமுமானதை நாடக நண்பர்கள் எண்ணியெண்ணி கண்ணீர் விட்டனர். மைனரை மோசடி செய்ததாய் தாசியும், தாய்க் கிழவியும் அதற்குஒத்திருந்ததால் போலீசும் தீவாந்திர தண்டனையடைந்தார்.

குடி மயக்கத்தால் தகவலின்றி பிணத்தை அடக்கம் செய்ததற்காக சத்தியநாதனுக்கு அப் பெரிய உத்தியோகஸ்தர் கீழ்ப் படிந்தது மில்லாமல் தனக்கு அவைகளில் ஏராளமாய் வரக் கூடியு வரும்படி யையு மிழந்தார். நீதிக்கும் சத்தியத்திற்கும் தர்மத்திற்கு மென்று மழி வில்லை யென்பது பிரத்தியட்சம். கல்வி யறிவும், நல்லோர் தோழமையும் கற்பகதருவும், காமதேனுவும் போன்றன. மைனர் சத்தியநாதனுக்கு பதினுயிரம் ரூபாய் பரிசளித்தான். சுய நல மின்றி வேலை செய்ததால், உப்பிட்டவரை உள்ளளவும் நினைத்ததால், விசுவாசம் மறவாதிருந்ததால் சத்தியநாதனுக்கு உழைப்புக்குத் தகுந்த பலன் கிட்டிற்று. நல்ல நேசம் பார்ப்பதுபோல நல்லவர்களையே வேலைக் கமர்த்த வேண்டும். எங்கும் என்றும் மோசம் நாசத்தையும், சத்தியம் சுகத்தையுமே நல்கும்.

(கதையை யல்ல கருத்தைக் கவனியுங்கள்)

சம்பூர்ணம்.

---

நல்லது. நான் கோயிலில் புராணம் படித்ததைக் கேட்கப்போனேன்.

சோ—என் மதியீனத்தை நொந்து கொண்டேன். உண்மை யுணர்ந்தேன். இனிவரும் ஏகாதசி தினங்களில் உன் மார்க்கவழியில் நடந்துகொள்கிறேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சில பேதையர்.

இத்தலைப்பு கண்டவுடன் எவர்களில் சில பேதையர் -- என ஐயுறலாம். இவ் வையப்பரட்டை பிராமணரல்லாதாரில் சில பேதையர் என்று தெளிவு கொண்டு நீக்கிக் கொள்வார்களாக. பிராமணரல்லாதாரிற் சிலர், சமரசம் ஓம்பி வலுத்து வரும் பிராமணரல்லா வியக்கத்திற்கு எதிர்ப்பு வேலை செய்ய முற்பட்டிருக்கிறார்கள். பிராமணரல்லாதார் எல்லாரும் ஒன்று என்ற கொள்கை கொண்டு பிராமண ஆதிக்கத்தினின்றும் விடுபட ஏகோபித்த மனத்தவராய் இயக்கம் நடாத்தி வர, இவர்கள் மட்டும் பிராமணர் பக்கம் சேர்ந்து எதிர்ப்பு வேலை செய்ய மனங் கொண்டதேனோ! என்ன ருசி காட்டினார்களோ! பிராமணர்கள் உடன் உறைந்து கொண்டோம் என்ற கௌரதையை முன்னிட்டோ! அவர்கள் ஸ்பரிசம் கிடைக்க வெகு நாட் கிடந்த தவம் பலித்து விட்ட தென்றோ! என்ன காரணத்தைக் கொண்டோ இவர்கள் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் பேதமையை என் னென்று இயம்புவது?

இவர்கள் பிராமணரல்லா வியக்கத்தில் என்ன தவறுதலைக் கண்டு பிராமணர்களைத் தூக்கி நிறுத்த முனைந்து விட்டார்கள் என்பது தெரிய வில்லை. இவ் வியக்கத்தாலாம் பயனை இவர்கள் அறிய மாட்டார் போலும். பிராமணரல்லாதார் பிராமணருக்கு அடிமைகளாக்கப்பட்டிருக்கிறார்க ளென்பதை யவர்கள் அறியட்டும். அவர்கள் அநியாயங்களை யெல்லாம் அவர்களாக்கி வைத்த மனு தர்ம சாஸ்திரத்தை ஊன்றிப் படித்துப் பார்க்கட்டும். வருணாச்சிரம தர்மக் கொள்கைகளையும் படித்துப் பார்க்கட்டும். இவர்கள் சுய நலமின்றிப் பெருந் தன்மையுடன் கூடிய மன முடையாராயின் பிராமணத் தன்மையை உணருவார்கள். இவர்கள் இவற்றைப் படித்துப் பார்க்க சாவகாசமில்லா விட்டால் மற்றவரிடம் கேட்டாவது தெளியட்டும். கற்றும் கேட்டுமிருந்தும் இது பற்றி யிவர்களுக்கு அக்கரை யேற்படாதிருந்தால் வர்ணாச்சிரம தர்மப்படி இவர்களுக்குச் சிறிது பெருமை யிருக்கலாம் எனக் கொள்ள வேண்டும். இப்பெருமைக்கு அழிவு வந்து விடுமோ வெனப் பயந்து சுயநலத் தேட்டத்தால் பிராமணரைத் தேடி யோடி யிருக்கலாம். இவர்கள் எங்கு ஓடி ஒளிப்பினும் என்ன? நெருப்புக் கோழி ஒளித்துக் கொள்வது போலாகி விடுவதையே யொக்கும். வர்ணாச்சிரம தர்மமே யழியப்போகும் போது இவர்கள் ஒரு சிறிது பெருமைக் காசைப்படுவானேன்?

பிறப்பில் எல்லோரும் ஒன்று என்றாகும் போது ஒருவர்க் கொருவர் வித்தியாச மில்லை. இவர்கள் வித்தியாசமில்லா ஜன சமூகமாய் வாழப் பிரியப்பட ஏன் கூடாது? இவர்கள் தமக்குக் கீழா யுள்ளவர்களை எம்மாதிரி மதிக்கிறார்களோ அம்மாதிரியே பிராமணர்கள் இவர்களை மதிப்பார்கள் என்னும் மதியை எங்கே? குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு போல் தலை தூக்கி விட்டார்கள். இவர்கள் ஓம்பும் வர்ண தர்மப்படி இவர்கள் பிராமணர்களுக்குப் பாத சேவை செய்ய வேண்டியவர்கள்தானே! வர்ணாச்சிரம தர்மப்படி நாடு சிதறுண்டு ஒன்று பட்டபலம் கெட்டு தேசியப் போருக்குப் புற முதுகு காட்டும் தன்மையிலிருக்கிற தென்பதை யறிந்து, தேச நலங் கோரும் மேதாவிகள் இதை யொழிக்க வேண்டுமென வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை பிராமண மயக்குண்ட பேதையர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தேசீய ஞானம் பிறப்பில் ஏற்றத் தாழ்வு கொள்ளும் இவர்களுக் கென்ன விருக்கும்? பிராமணர்களைத் தலை மேல் வைத்துக் கொண்டு ஆதித்திராவிடர்களை மிதித்து நடக்கலாம் என்று நினைத்திருக்கிறார்கள். ஆதித்திராவிடர்களை மிதிக்கும் பெருமை கொள்ளப் பிரியப்படுகிறார்களே தவிர இவர்கள் தலை மேல் பிராமணர் பீஜத்தை வைத்திருப்பதுபற்றி நாணினாரில்லை. இன்னனை யாருக்கு நாம் எப்படித்தான் புத்தி கற்பிப்பது?

பிராமணர்களும் தம்மாலான மட்டும், இப் பேதையரின் உதவி கொண்டும் தம்முடைய பிடிவாதத்தை விடாமலிருந்து விடலா மென்று தான் எண்ணுகிறார்கள். அது தான் பலிக்காதென்பதை யவர்கள் அறிய வேண்டும். நாட்டில் சமரஸம் நிலவுவிடாது செய்திருந்த பிராமணர்கள் ஒரு புறம் இருக்கட்டும். அவர்கள் வால் பற்றிப் பல்லை யிழித்துப் பாதம் வருடி நிற்கும் பிராமணரல்லாப் பேதையர்களையே துறட்டி போட் டிழுப்போம். இவர்கள் ஒரு உறுதி வார்த்தை கொடுத்து விட்டுத்தான் பிராமணர் பக்கம் சேர வேண்டும். அதாவது, தமக்கு ஒன்றும் வேண்டாம்; பிராமண சேவையே போதும்; அதனால் எவ்வவமானமும், எவர் சாபமும் பொறுத்துக் கொள்வோம் என்பதே. கடைசியாக ஒரு வார்த்தை. பிராமணர்களும், அல்லாத பேதையர்களும் சமத்துவப் பாலன் சக்கரத்தி லடிபட்டுப் போகும் காலம் கிட்டி விட்ட தென்பதை யறிவித்துக் கொள்கிறோம்.

ஓர் சமரஸன்.

சாற்றிடும் சமத்துவத் தன்
(வழி நின்று புகழ்
ஏற்றிட எண்ணிலார் என்
(மக்கள்?

## மதிப்புரைகள்.

### "சுதேசமித்திரன்" வருஷ அனுபந்தம்.

1927-ம் வருஷ அனுபந்தம் ஒன்று கிடைத்தது. இதன்முன்பக்கத்தில்வங்க நாட்டுச் சிங்கம்—வானுல கெய்திய தங்கம் ஸ்ரீமான் ஸி. ஆர். தாஸ் அவர்களைச் சிரோரத்தினமாய்த் தாங்கி, தேசீயக் கொடி, கை ராட்டினம், கதர் தூற்கழி கைப் பிடித்து நிற்கும் பாரத மாதாவின் அழகிய ஸ்வரூபப் படம் அமைக்கப் பெற்றிருக்கிறது. பல அறிவாளிகள் தீட்டியுள கட்டுரைகளும், மற்றும் பல விஷயங்களும் உள்ளுறப் பொதிந்து கிடக்கின்றன. கவர்ச்சியான டாக்டர். அன்சாரி உருவப் படமும், மலாய் நாட்டுக் காக்ஷிப் படங்களும், மற்றும் பல படங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஸ்ரீ வால்மீகி ராமாயண சாணக்கி சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் மிளிர் வுற்றிருப்பது பக்தி மார்க்கர்களுக்குத் திருப்தி தரவல்லது. இதன் விலை அணா 4. "சுதேசமித்திரன்" நம் நாட்டுக்குச் செய்து வரும் தொண்டு குறித்து பத்திரிகை யுலகத்தில் யாருக்கும் சொல்லத் தேவை யின்று. அஃதாற்றி வரும் தொண்டுக்கு எமது நன்றியறிதல் உரித்தாகுக.

ஃ ஃ ஃ

### அறிக்கைப் பத்திரம்.

காரைக்குடி, "இந்து மதாபிமான சங்கம்" 10-ம் வருஷ அறிக்கைப் பத்திர மொன்று வரப் பெற்றோம். கணக்கு விபரமும், சங்கம் பற்றிய சகல விபரங்களும் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. இச் சங்கம் செய்து வரும் வேலைகளைப் பெரிதும் யாம் பாராட்டுகின்றோம். இம் மாதிரி பல சங்கங்கள் ஆங்காங்கே நிறுவப் பெறின், இந்து மதப் பிரகாசம் எங்கும் ஒளிரும். செல்வம் கொழிக்கும் செட்டி நாட்டிலுற்பவித்த இச் சங்கம் வாடா திலங்கு மென்பதற் கையமில்லை.

## கட்டடப் பூர்த்தி.

திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுகா, தோப்புக்குளம் என்ற ஊரில் இந்துக்களால் கட்டப்பட்ட இந்து ஆலயம் ஒன்றில் கல் மண்டபம் கட்டி முடியாமல் வெகு நாளாய் குறை கட்டடமாக விருந்ததை, தமது வகையறுப் பேர்வழிகள் சேர்ந்து கட்டி முடித்து கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார்கள் என ஸ்ரீமான் சு. பு. மா. வெள்ளையா நாடார் எழுதுகிறார்.

## பர்மா.

### புதிய கவர்னர்.

ஸர். சார்லஸ் இன்ஸ் பர்மாவுக்கு கவர்னராகப் புதிதாய் நியமிக்கப்பட்டு செஸர் என்னும் கப்பலில் 20-12-27-ல் காலையில் ரங்கூன் வந்து இறங்கினார். சூலே பகோடா பாலத்தில் போய் மேன்மை தங்கிய பழைய கவர்னர் ஸர். ஹர் கோர்ட் பட்லர், ஸர். வில்லியம், மிஸ்டர். டபிள்யு. பி.பிராண்டர் (முக்கிய காரியதரிசி) முதலியவர்கள் வரவேற்றார்கள். ஸர். சார்லஸ் இன்ஸ், கவர்ன்மெண்டுஹவுஸுக்கு மற்றவர்களோடு மோட்டாரில் போனார்.

பின் அங்கிருந்து மேன்மை தங்கிய புது கவர்னர், மோட்டாரில் புறப்பட்டு, செக்ரட்டேரியட்டை நோக்கி வந்தார். சூலே பகோடாரோடும், மாங்காமரி ரோடும் சந்திக்கும் இடத்தில் நாலு குதிரைகள் பூட்டிய ராஜியக் கோச்சு வண்டியில் ஏறினார். பிரைவேட் செக்ரட்டேரியும், எய்டி கெம்பும் அவரோடு சென்றனர்.

கவர்னர் போகும் வழிகளிலெல்லாம் இந்திய சிப்பாய்களும் ஐரோப்பிய சிப்பாய்களும் தங்களுடைய ஆயுதங்களைத் தயாராக வைத்துக் கொண்டு, தலைவரின் உத்தரவுப்படி நின்றார்கள். குதிரைப் பட்டாளங்களும் கவர்னருக்கு முன்னும் பின்னுமாக வந்துகொண்டிருந்தன.

சுமார் 11-45 மணிக்கு செக்ரட்டேரியட்டுக்கு வந்து கவுன்ஸில் ஹாலை அடைந்தார். எக்காளத்தொனி ஊதப்பட்டது. கவர்னர் வரவை எதிர்பார்த்திருந்த சீப் ஜஸ்டிஸ் ஆனரபிள் பைஞஸ் மெம்பர், லேடி இன்ஸ் வரவேற்பு செய்தனர். ஸர். சார்லஸ் இன்னை கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த விஷயத்தை முக்கிய காரியதரிசி வாசித்தார். சீப் ஜஸ்டிஸ் சத்தியம் சம்பந்தப் பட்ட காரியங்களை நடத்தினார். மேளவாத்தியங்களோடு, ராஜ வாழ்த்து பாடப்பட்டது. நல்வரவைத்தெரிவிக்கும் பொருட்டும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் காட்டும் பொருட்டும் ஏற்பட்டுள்ள 17 குண்டுகளும் போடப்பட்டன.

கொஞ்சநேரம் ஆனதும், கவர்னர், கார்ப்போரெஷன் சேம்பருக்கு விஜயம் செய்தனர். அங்கிருந்த எல்லோரும் சந்தோஷக் குறிப்பை சப்தத்தால் தெரிவித்தனர். வரவேற்புப் பத்திரமும் வாசிக்கப்பட்டது.

எல்லோரும் வியக்கும்படி, மிஸ் மோலிஸேன் என்ற பர்மா பெண்மணி பூச்செண்டு கவர்னருக்கு அளித்தனள்.

### ஸர். ஹர் கோர்ட் பட்லர்.

மேன்மை தங்கிய பர்மா கவர்னர் ஸர். ஹர்கோர்ட் பட்லரின் 5 வருஷ அரசாட்சி 20-12-27ல் முடிவானபடியால் ராஜிய பாரத்தை ஒப்புக் கொடுத்து விட்டு சுமார் 10-30-மணிக்கு கவர்ன்மெண்டு ஹவுஸிலிருந்து பிரயாணங்கொண்டார். நான்கு குதிரை போட்ட ராஜிய வண்டியில் பிரயாணப் பிரசன்னராயிருந்தார். வண்டி துறை முகத்திற்கு ஊர்வல கோலத்துடன் செலுத்தப்பட்டது. பிரைவேட் செக்ரட்டரியும் எய்டி கெம்பும் கவர்னரோடு இருக்கை கொண்டிருந்தனர். குதிரைப் பட்டாளங்கள் முன்னும் பின்னும் கொடிகளைப் பிடித்துக் கொண்டு கம்பீரமாய் வந்தன. ரங்கூன் முழுவதும் இந்தியப் பட்டாளங்களும், ஐரோப்பியப் பட்டாளங்களும் வரிசையாய் நிறுத்தப் பட்டிருந்தன. ரோடுகளின் இருபக்கத்திலும் கவர்னரைப் பார்க்க ஆவலோடு நின்ற ஜனங்களின் தொகையை கணக்கிடமுடியாது. எல்லா கவர்ன்மெண்டு ஆபீஸ்களுக்கும்ரஜா கொடுக்கப்பட்டிருந்ததனால் உத்தியோகஸ்தர்களின் குழாங்கள் எங்கு பார்த்தாலும் நிறைந்திருந்தன.

கவர்னரின் வண்டிவந்த ரோடுகளில் நின்ற ஜனங்கள் வெகுமரியாதையோடும் சந்தோஷத்தோடும் தங்கள் தங்கள் தொப்பிகளைத் தூக்கிக்கொண்டு வந்தனம், போய்வாருங்கள் என்று கோஷித்துக் கொண்டு நின்றனர். கவர்னர் துரையும் அடிக்கடி தலையை அசைத்துக்கொண்டு பதில் வந்தனமளித்துக்கொண்டு சென்றனர்.

துறை முகத்தை யடைந்ததும் ஸ்ரீமான் ஹரி கிருஷ்ணபிள்ளையவர்கள் ஒருபொன்மாலையைக் கவர்னரின் கழுத்தில்சூட்டினார்கள். அவ்வாறேடாக்டர். ராவ்பகதூர் சிதம்பராமநாத ரெட்டியார் அவர்களும் பொன்மாலையைச்சூட்டினார்கள். அழகாகவும் விலை யுயர்ந்ததாகவும் உள்ள பூச்செண்டும் அளிக்கப்பட்டது.

அங்கோரே என்னும் நீராவிகப்பல் கொடிகளால் மிகவும் சிங்காரிக்கப்பட்டு ஸ்பார்க்ஸ் தெரு பாலத்தில் நின்றது. பாலத்தின் பக்கம் டிக்கெட்டுகள் வைத்திருந்தவர்களிலும் கொஞ்சப் பேர்தான் பாலத்தின் உள்ளேபோக முடிந்தது. அவ்வளவு கூட்டம் அதிகம்! கவர்னர் வண்டியிலிருந்து இறங்கியதும் நாஷனல் ஆந்தம் (ஆங்கில தேசிய கீதம்) மிலிட்டரி சிப்பாய்களால் பாடப்பட்டது. கவர்னர் அங்கு நின்ற முக்கியஸ்தர்களோடு கை குலுக்கினர். கார்ப்பொரேஷன் பிரஸிடென்டு மிஸ்டர் காம்பெக்ஞக் என்பவர் மூன்று சீயர்கள் (சந்தோஷ ஆரவாரங்கள்) கொடுத்தனர். எல்லோரும் ஹீப் ஹீப் ஹோரே என்று ஆர்ப்பரித்தனர். காப்டன் டோஸரும் ஏ. டி. ஸி. அதே கப்பலில் கூடவே சென்றனர். கப்பல் புறப்பட்டு கரையை விட்டதும் கௌரவப்படுத்தும் பொருட்டு 17 குண்டுகள் போடப்பட்டன.

கா. சு. தங்கவேல் நாடார்,
ரங்கூன்.

## கனம், ராமநாதபுரம் ராஜா அவர்கள் கவனத்திற்கு.

கனம். ராமநாத்புரம் ராஜா அவர்கள் 6-12-27ல் இங்கு (கல்லூருணிக்கு) விஜயஞ்செய்திருந்தார்கள். அந்நன்னாளில் அன்னாருக்கு இவ்வூர் மகாஜனங்கள் ஓர் உபசாரப்பத்திரம் சமர்ப்பித்தார்கள். ஆனால் கனம். ராஜா அவர்கள் தமக்குள்ள அவசர ஜோலியினிமித்தம் உபசாரப்பத்திரம்கொடுத்தக்ஷணமே புறபட்டுவிடநேர்ந்தமையான், ஜனங்கள் ராஜாவின் திருவாயினின்றும் அவ்வுபசாரப் பத்திரத்திற்குப் பதிலுரை செவிமடுக்கப் பாக்கியம் உடைத்தாரிலராய்ப் போயினர். எனினும் மகாஜனங்கள், கனம். ராஜா அவர்கள் உபசாரப் பத்திரம் பற்றிய தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திக் கொள்வார்கள் என நம்பிக்கைகொண்டு எதிர் பார்த்திருக்கின்றார்கள். ஆகையால் கனம். ராஜா அவர்கள் அவ்வுபசாரப் பத்திரத்திற்குரிய பதிலை எமக்கனுப்புவார்களானால் அதை மகாஜனங்களுக்குப் பிரசுரமூலம் பிரசித்தப்படுத்தத் தயாரா யிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காரியதரிசி,
"வாலிபநாடார் சங்கம்",
கல்லூருணி.

## புலி வேட்டை.

சதுரகிரி என்னும் மலைக்குக் கிழக்கே 8 மைல் தூரத்திலுள்ள 11 நிர். கரிசல்குளம் என்னும் கிராமத்தில் ஸ்ரீமான் சிவனணைந்த பெருமாள் நாடாரின் புஞ்சையில் 9-12-27-ல் காலை சுமார் 8-மணிக்கு 16 அடி வேங்கை என்ற பெரும்புலியொன்று அங்குவந்து இரண்டு மனிதர்களைக் காயப்படுத்தியது. உடனே புலி புலி என்ற கூச்சல் பறந்தது. வெள்ளப்பொட்டல் கிராமம் ஸ்ரீமான் வெள்ளைச்சாமி நாயக்கரும், கரிசல் குளம் ஸ்ரீமான் குமாருநாடார் என்பவரும், அரசடியிலிருந்துவந்த ஒரு ஆதி திராவிடரும் ஆயுதப்பாணிகளுடன் வேட்டைக்குச்சென்று அந்தப் புலியுடன் பயங்கரமான சமர்புரிந்தனர். வேடிக்கை பார்க்கவேண்டி பக்கத்திலுள்ள ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக சுமார் 1000 பேர்கள் வந்து சூழ்ந்தனர். அந்தப் புலியும் கோபா வேசமாய் 5 பேர்கள் வரையிலும் கடித்தும் பிடித்தும் நகத்தால் கிழித்தும் காயப்படுத்தியது. இம் மூவரும் பின்வாங்காமல் அதனோடு சுமார் 2-மணி வரையிலும் விடா முயற்சியுடன் சண்டை நடத்தினார்கள். கடைசியாக பின்னும் சிலர் சேர்ந்து ஆயுதங்களினால் புலியினுடைய கோரத்தைத்தணித்துக் குத்திக் கொன்றார்கள். உடனே சந்தோஷத்துடன் ஜனங்கள் கரகோஷஞ் செய்து இறந்த புலியையும் பார்வையிட்டுக் கலைந்தார்கள். இறந்த புலி ஊருக்குள் கொண்டு வரப்பட்டது என ஷை யூர் ஸ்ரீமான் சண்முகவேல்நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



காசி தலம் பிறப்பிறப்புப் பந்த முக்தி
அருவுருவத் தன்மை நாம
சேது மீன்றி பெயப்பெரகட்டு செவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஹு மார்கழி மீ ௨௫உ

---

## தேசியத் திருவிழா.

### 11

சென்னையில் நடந்த தேசியத் திருவிழாவின் சிறப்பைப்பற்றிச் சென்ற வாரத்தில் சிறிது விளக்கியிருந்தோம். திருவிழா ஆரவாரத்தையும், அலங்கோலத்தையும், தொண்டர்கள் அடிதடியும், அயோக்கியத்தனமும், சுயமரியாதையற்ற வீணுடம்பரங்களும் நேரிற் பார்த்தவர்கள் நன்குணருகிறார். நம் பாரத நாட்டில் வறுமையால் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கும் வழியின்றி வாடித் தவிக்கும் ஏழை மக்களின் கதி யென்னவது? தென்னாப்பிரிக்கா, கெனியா முதலிய குடியேற்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்குக் கதிமோட்சமில்லையே யென்று கண்ணீர் வடிப்பவர்களுக்குப் பரிகாரமென்ன? ஒற்றுமையாமைக்கும் தைரியமில்லை. முட்டுக்கட்டையிலும் பிரயோசனமில்லை. பின்னர் அனுசரிக்க வேண்டிய கடமைதானென்னவென்பதைத் தலைவரும் வரவேற்புத் தலைவருந் தான் சரியானபடி விளக்காமற் போனாலும், கூடிய சபையோர்களாவது திடமான தீர்மானங்கள்செய்யவில்லை. மகாத்மா காந்தி, ஸி. ஆர். தாஸ் இவர்கள் புதிய தேச நிர்மாணத்திட்டங்களை அடியோடு சென்னைக் காங்கிரஸ் மறந்துவிட்டது; மறுத்தும் விட்டது. பொருட்காட்சியும், தெருக்காட்சியும் கண்ட நமக்கு காங்கிரஸ் எமாற்றுந் திருவிழாவென்று "குடியரசு" கூறிய ஞாபகம் சரியென்று புலனாகிறது. 1891-ம் ஹு நாகபுரியில் நடந்த காங்கிரஸில் லாலா முரளீதர் உவமைகூறி உண்மையுடனும், உணர்ச்சியுடனும்சுயநலக்காரரைக் கண்டித்துப் பேசிய வார்த்தைகள் சென்னைக் காங்கிரஸை நடத்திவைத்தவர்களுக்கு சாலவும் பொருந்தும். அதாவது:—

வறுமை யென்ற பேய்ச்சிக்கு பல பிசாசுக் குழந்தைகளுண்டு. அவையாவன, கஷ்டம், பஞ்சம், இழிவு, துக்கம், நோய், குற்றம் என்பனவாம். இந்தப் பிசாசுகள் நமது நாட்டில் நடனம் செய்வதற்கு ஜனங்கள், ராஜாங்கத்தார் கள் ...ன்ற இங்கிலாந்தும் காரணஸ்தரென்பதரும். ஸ்வதேசிகளே நீங்களும் அப்பேய்களுடன் சேர்ந்துகொண்டு உங்கள் சொந்த சகோதரரின் இருதய ரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்து மகிழ்ச்சியடைந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. (இங்ஙனம் முரளீதர் பேசிவருகையில் சபையாரில் சிலர் இல்லை இல்லையென்று கத்தினார்கள். அப்போது முரளீதர் மேலும் சொல்லுகிறார்.)

ஆம் நீங்கள் அப்பேய்களுடன் முழுதும் கூடிக்களிக்கின்றீர்கள். இந்த ஐரோப்பிய சாலாந்தர்களும், தீபங்களும், ஐரோப்பாவில் செய்த நாற்காலி மேஜைகளும், சொகுசுத்துணிகளும், தொப்பிகளும், இங்கிலீஷ் சட்டைகளும், கழுத்துக்கட்டு வகையறுக்களும், வெள்ளிப்பூண் வெளிநாட்டுப்பிரம்புகளும், உங்கள் வீட்டுப் படாடோபமான சோடிப்புகளும் இவையெல்லாம் பாரத நாட்டின் துக்கச் சின்னங்கள்; பாரதமாதாவின் பசிக் கொடுமையான அடையாளங்கள். நீங்கள் ஐரோப்பிய சாமான்கள் மீது செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் யோக்கியமான கைத்தொழிற் செய்து பிழைக்கக்கூடிய உங்கள் ஏழைச் சகோதரர்களுக்கு நஷ்டம். இப்போது அவர்களுக்கு ஜீவன வழியில்லாமற் செய்துவிட்டது. இந்தியாவில் ஐரோப்பிய சாமான்களை வெள்ளம்போல் பரப்பி அதனால் தினே தினே தேசியக் கைத்தொழிலைக்கொன்றழித்து இவ்வழிப்பைத் தூண்டும்பொருட்டு இறக்குமதித் தீர்வைகளை நீக்கி செல்வர் செலுத்திய மூன்று கோடி ரூபாய் தீர்வை வரவை நஷ்டப்படுத்திக் கொண்டு அந்நஷ்டத்தை ஈடுபண்ணும்பொருட்டாக ஏழைகள் செலுத்திய உப்பு வரியை உயர்த்தி இந்தியாவில் புதிதாகத் தோன்றியிருக்கும் ஒரே சிறு தொழிலாகிய இயந்திர நெசவுத் தொழிலை சாத்தியப்படாமல் கொல்லும் பொருட்டாக நம்மீது ஆலை விதிகளை அழுத்துவதாகிய செய்கைகளெல்லாம் சுத்தமான பரோபகாரத்தால் விளைந்த செயல்களென்று சிலர் கூறியதை நான் அறிவேன். அவையெல்லாம் பரோபகாரந்தான். ஆனால் அதனாலும் அதனுடன் சில காரணங்களாலும் உங்கள் சகோதரருக்குள் பசிதான் பயனாக விளைந்திருக்கிறது என்பதேயாம்.

சென்னைக் காங்கிரஸ் ஆடம்பரமும் பொருட்காட்சியும் முரளீதர் கூறியது போல் பாரத நாட்டின் துக்க சின்னங்களாகவே தோன்றினவென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. சட்டசபையைவிடக்கூடாதாம்; ஸைமன்கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமாம். **அவசியமான பாதுகாப்புக்காக விடக்கூடாதாம்.** ஆஹா என்ன தந்திரம்! நரித்தந்திரங்கற்ற பிரிட்டிஷார் நாய்த்தந்திரமறியார்களா? எலும்பைப் போட்டால் கொச்சி நாய் கத்துதல் ஒழியுமென்பதை அவர்கள் ஆதிமுதலறிந்துவந்திருக்கின்றார்களே. சட்டசபையில் இவர்கள் சாதித்ததென்ன? நிறைவேற்றிய தீர்மானங்களின் கதி யென்னவாயிற்று? சீனாவுக்குப் படையனுப்பாமலிருந்ததா? பணம் செலவாகாமலிருந்ததா? காங்கிரஸ் உண்மை வீரர்களெல்லாம் ஒதுங்கிவிட்டார்கள். ஒரு சில சோத்து முட்டி ஆசாமிகள் சுயநலங்கொண்டு திரிகிறார்களென்று சிறு பிள்ளைகளுங் கண்டுகொண்டிருக்க அரசாங்கத்தார் அறியாதிருப்பார்களா?

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

நம்பது சங்கம் கௌன்ஸில் மீட்டிங் 1928 ஹு ஜனவரி மீ 16உ (பிரபவ-ஹு தை மீ 3உ) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சங்கம் ஆபீஸில் நடைபெறும். ஆலோசிக்கப்பெறும் விஷயங்கள் முக்கியமானதா யிருப்பதால் கவுன்ஸிலர்கள் ஒவ்வொருவரும் தவறாது விஜயஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஆலோசிக்கப்படும் விஷயங்களாவன:- 1. 1927-ம் ஹு ஏப்பிரல் மீ 1உ முதல் டிசம்பர் மீ 31உ யோடு முடிந்த மாதங்களில் செய்த வேலைகளையும் வரவு செலவு கணக்குகளையும் பற்றிய ரிப்போர்ட்டைக் கவனித்தல். 2. கௌன்ஸிலுக்கு பத்து ஆர்டினரி அங்கத்தினர்களை நியமுகஞ் செய்தல். 3. வசக்கட்டுக் கணக்கில் பாக்கியிருக்கும் ரூபாய்களை வசூல் செய்வதற்குரிய முறைகளைக் கவனித்தல். 4. சங்கத்தின் நிர்வாகம் தீவிரமாய் நடைபெறுவதைப்பற்றி ஆலோசித்தல். 5. 11-வது கான்பரன்ஸ் வரவு செலவு கணக்குகளையும், ரிப்போர்ட்டையும் சரிபார்த்து ஒப்புக்கொள்வதைக் குறித்து ஆலோசித்தல். 6. 11-வது கான்பரன்ஸ் ரிப்போர்ட்டைக் குறித்து "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் அவர்களிடமிருந்து வந்திருக்கும் லெட்டரைக் கவனித்தல். 7. திவான்பகதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் "ஹிந்து" பத்திரிகையில் நமது சமுகத்தைப்பற்றி எழுதிய கட்டுரையைக் குறித்து "ஹிந்து", "சுதேசமித்திரன்" ஆசிரியரிடமிருந்தும் ஸ்ரீமான் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்களிடமிருந்தும் வந்திருக்கும் லெட்டர்களைக் கவனித்தல். 8. காரியதரிசிகளால் கொண்டு வரப்படும் இதர விஷயங்களைக் கவனித்தல். 9. சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்கள் கொண்டு வரும் தீர்மானங்களைக் கவனித்தல். தவிர சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்த அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்கப்பெறும்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
காரியதரிசிகள்.

---

கமிஷன் முன் சாட்சி சொல்லக்கூடாதென்றால் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லாவிட்டால் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் சொல்லாதிருப்பாரா? விருந்துக்கு சத்தியமூர்த்தி ஐயர் போகாவிட்டால் ஸர். ஸி. பி. ஐயர் போகாதிருப்பாரா?

அரைக்கால் மாகாணிச் சுயராஜ்யத்திற்கே முழந்தாளிட்டு முடிவணங்கி முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டும் முடியாமலிருக்கும்போது, பூரண சுயேச்சைத் தீர்மானம் ஒரு காசு பெறுமா? கல்வக்கு தவுமா வென்றுதான் கேட்கின்றோம். மகாத்மா காந்தி கதர்த்திட்டமெங்கே? தீண்டாமை தீர்வதெங்கே? மதுவிலக்கெங்கே? ஸி. ஆர். தாஸ் கிராம நிர்மாணத் திட்டமெங்கே? பிராமணரல்லாத பெருந் தகையாளரும், இந்தியாச் சட்டசபை அங்கத்தினரும், பழுத்த காங்கிரஸ் வாதியுமாகிய ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்கள் ஜாதி மதபேதமின்றி சமத்வ முறை தழுவக் கொண்டுவந்த தீர்மானந்தானெங்கே? ஐயங்கார் புறத்தே போட்டுவிட்டனரன்றோ! இதுவா ஆரம்பத்தில் **பாரத ஜாதீய ஐக்கிய சங்கம்** என்றழைத்த மாபெருஞ் சங்கம்? இல்லை இல்லை; அகில இந்திய ஐயங்கார் சங்கம். ஆம் அதைத்தான் முழுவதும் ரூபிக்கின்றது. மகாத்மா காந்தியை மூன்று நாளும் மூச்சுவிடக்கூடாதென்று மூலையிலொதுக்கிவிட்டார்கள். இன்னும் சொல்வதென்றால் சூட்சிகள் பலவுண்டு. ஆகையால் எமாற்றுத் திருவிழாவெனக் "குடியரசு" கூறுவதில் உண்மையுண்டென்பதே நந்துணிபு.

---

## மகாநாடுகளின் மாபெருந்தலைவர்கள்.

அகில இந்தியக் காங்கிரஸ் மகா சபை—டாக்டர். அன்சாரி.

---

கிலச்சுவான்கள் மகாநாடு—தர்பாங்கா மகாராஜா.

---

அகில இந்திய ஹிந்தி மகாநாடு—ஸ்ரீமதி ஸரோஜினிதேவி.

---

வாலிபர் மகாநாடு—லாகூர் டாக்டர். கேசவ தேவசாஸ்திரி.

---

கீழ்தர ஆசிரியர் மகாநாடு—கனம் டாக்டர். சுப்பராயன்.

---

இயற்கை சிகிச்சை மகாநாடு—ஸ்ரீ ஆர். வி. சட்டர்ஜி.

---

இந்திய தத்துவ ஞானிகள் மகாநாடு—ஆசிரியர், எஸ். ராதாக்கிருஷ்ணன்.

---

செங்குந்தர் மகாநாடு—"அருணகிரி" ஆசிரியர், ஸ்ரீ ராமநாத முதலியார்.

---

ஹிந்து மகாசபை—பண்டித மதன் மோகன மாளவியா.

---

குடியரசுக் கட்சியார் மகாநாடு—பண்டித ஜாவேர்லால் நேரு.

---

இந்தியக் கைத்தொழில் வர்த்தக காங்கிரஸ்—ஸர். இப்ராஹிம் ரஹிம்துலா.

---

ஸ்திரீகள் மகாநாடு—ஸ்ரீமதி ஜானகி பாய்பட்.

---

இந்தியப் பொருளாதார மகாநாடு—மிஸ்டர். டார்லிங்.

---

அகில இந்திய கிலாபத் மகாநாடு—மௌல் வி. முகமத் ஷாபிதாவுத்.

---

அகில இந்திய மாணவர் மகாநாடு—டாக்டர். பட்டாபி சீதாராமய்யர்.

---

குருகுலக் கல்வி மகாநாடு—சாது, டி. எல். வாஸ்வானி.

---

அகில இந்திய சூர்க்கர் மகாநாடு—சர்தார் ஜீவன்சிங்கு.

---

தொழிலற்றோர் மகாநாடு—டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு.

---

பம்பாய் ஆசார சீர் திருத்த மகாநாடு—ஸர். பி. எம். சித்னவிஸ்.

---

முன்னோடிகள் சங்கம் மூன்றாவது ஆண்டுவிழா—சாது, வாஸ்வானி.

---

ஜில்லாக் கல்விச் சபைத் தலைவர்கள் மகாநாடு—திவான் பகதூர் என். சுப்ராவ்.

---

அகில இந்திய சமஸ்தானக் குடிகள் மகாநாடு—ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

---

தப்லீக்மகாநாடு—பிரிட்டிஷ்க் காரராய்ப் பிறந்து முஸ்லீமான லார்டு ஹீட்லி.

---

இந்திய சமூக சீர் திருத்த மகாநாடு—டாக்டர். முத்துலட்சுமி அம்மாள்.

---

அகில இந்திய சங்கீத மகாநாடு—வி. ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார்.

---

அகில இந்திய ரெயில்வே பிரயாணிகள் மகாநாடு—ஸ்ரீமான் சின ராஜா தாஸர்.

---

ஸ்தலஸ்தாபன மகாநாடு—கனம் டாக்டர். சுப்பராயன்.

---

ஆசார சீர்திருத்தமகாநாடு—ஸ்ரீமான் கே. நடராஜய்யர்.

---

அகில இந்திய புத்தகசாலை மகாநாடு—டாக்டர். பி. பானர்ஜி.

---

மிதவாதிகள் மகாநாடு—ஸர். ஸாப்ரூ.

---

ஆரிய வைசியர்கள் மகாநாடு—சேத் ஜமன்லால் பஜாஜ்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மணி வாசகங்கள்.

நிலச்சுவான்களாகிய நாம் ஜாதி மத பேதமின்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து நமது சமூக நன்மையைக் காப்பாற்றும் பொருட்டு இந்தியர்களும், ஐரோப்பியர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

**தர்பாங்கா மகா ராஜா.**

நமக்கு விடுதலை வேண்டுமானால், நம் நாடு சுதந்திரம் பெற வேண்டுமானால், நமக்குள் ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால், கண்டிப்பாய் நமக்குப் பொதுப் பாஷை ஒன்று வேண்டும். பெரும்பாலோர் பேசும் ஹிந்திப் பாஷையை சிறுபான்மையோரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

**ஸரோஜினி தேவி.**

நாம் முன்னேற வேண்டுமானால், சில சமூகக் கொடுமைகளை நாம் ஒழித்தாக வேண்டும்; ஜாதிக் கொடுமைகள், ஜாதி வேற்றுமைகளைத் தொலைக்க வேண்டும்; தீண்டாமையை அறவே களைய வேண்டும்; முசோலனி அல்லது கமால் பாட்சா போன்ற ஒரு வீரன் தோன்றி, இந்த அக்கிரமங்களை அழிக்க வேண்டும். இந்த விலங்குகளை அறியாமையால் நமக்கு நாமே தயார்ச் செய்து கொண்டோம்; வாலிபர்களாகிய நீங்கள் தான் இந்த விலங்கை உடைத்தெறிய உதவக் கூடும்.

**டாக்டர். கேசவதேவ சாஸ்திரி.**

சீர்திருத்த ஆரம்ப காலத்தில் கல்வித் துறையில் கடையாக விருந்த பாஞ்சாலம் இப்போது சென்னைக்கு அடுத்த படியாக விளங்குகிறது. முன் நமது கணக்கு நூற்றுக்கு 6, 8 வீதமிருந்தது. இப்போது 8 வீதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் பாஞ்சாலம் முன் நூற்றுக்கு 1, 2 வீதமிருந்து இப்போது நூற்றுக்கு 5 , 7 க்கு உயர்ந்திருக்கிறது. பாஞ்சாலத்தைப் போல் வேகத்துடன் நாம் (சென்னை) அபிவிருத்தியடைந்திருப்போமானால் எல்லா மாகாணங்களுக்கும் தலையாக விளங்குவோம். நீங்களனைவரும் அரசாங்க உத்தியோகஸ்தரா யிருந்த போதிலும், கல்வியை அபிவிருத்தி செய்தால் நாட்டுக்கு உழைத்தவராவீர்கள்.

**டாக்டர். சுப்பராயன்.**

நீங்கள் வாழ வேண்டுமானால், சாக வேண்டும். கோடானு கோடிக் கணக்கான ஜனங்களடங்கிய இந் நாட்டு வாலிபர்கள் எழ வேண்டும். இந்த மானக் கேட்டை இனிமேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதென்று நீங்கள் உங்கள் தலைவர்களிடந் தெரிவித்து விட வேண்டும்.

**ஸ்ரீ ஷவுக்கத்தலி.**

தீண்டாமை விலக்கு விஷயத்தில் சென்னை மாகாணம் இன்னும் அதிகம்

---

வர்ணாச்ரமதர்ம மகாநாடு—ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாசாச்சாரியார்.

ஜீவகாருண்ய மகா நாடு—சாது, வாஸ்வானி.

சென்னை மாகாண டாக்டர்கள் மகாநாடு—டாக்டர். மல்லய்யா.

எம். எஸ். எம். ரெயில்வே ஊழியர்கள் மகாநாடு—எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

ரெயில்வேப் பிரயாணிகள் மகாநாடு—வி. துரைசாமி ஐயங்கார்.

அகில இந்திய கிறிஸ்தவர் மகாநாடு—மிஸ்டர். ரல்லிபராம்.

அகில இந்திய தொண்டர்கள் மகாநாடு—பண்டித ஜாவேரிலால் நேரு.

அகில இந்திய முஸ்லீம் கல்வி மகாநாடு—ஷேக் ஸர் அப்துல்காதர்.

அகில இந்திய ஆரியர் மகாநாடு—டாக்டர். மூஞ்சே.

வன்னி குல க்ஷத்திரிய மகாநாடு—திவான்பகதூர், வி. திருமலைப்பிள்ளை.

---

முன்னேற்ற மடையாததைக் குறித்து விசனிக்கிறேன். கோவில் தர்மகர்த்தாக்களும், வைதீகர்களும் ஹிந்துக் கோவிலுக்குள் சகல இந்துக்களும் சென்று சாமி தெரிசனம் செய்யும் உரிமையை அளிக்க வேண்டும். கோவிலுக்குள் நுழைந்த மாத்திரத்தில் எவனும் பரிசுத்தவானாகி விடுகிறான் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தமானவர்களாகிய நீங்கள், பரிசுத்தமில்லாதவர்களென்றும், தீண்டப்படாதவர்களென்றும் சொல்லப்படுவோரைத் தொட்ட மாத்திரத்தில் தீண்டப்படாதவர்கள் பரிசுத்தமாகி விடுகிறாரே யொழிய நீங்கள் பரிசுத்தம் நீங்கினவர்களாக வில்லை. உண்மையில் இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் போது அவர்களை நீங்கள் புறக்கணித்து விட்டு அவர்கள் புறமதத்தைத் தழுவிய பின் அவர்களை நீங்கள் கௌரவமாய் நடாத்துவதென்றால் அதை விடக் கேவலம் வேறெதுவுமில்லை.

**மதன்மோகன மாளவியா.**

தீண்டாமை யெனும் பதமே தர்ம சாஸ்திரங்களில் கிடையாது. சிறப்புற்ற முன் காலத்தில் தீண்டாமையே கிடையாது. தீண்டாமை இருக்கும் வரை இந்து சமூகத்துள் ஒற்றுமை ஏற்பட மார்க்கமில்லை. இந்து சமூகத்துள் ஒற்றுமை ஏற்படும் வரை இந்தியா விடுதலை யடைய மார்க்க மில்லை. 7 கோடி ஜனங்கள் தீண்டாதார் என ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு தொகை யுள்ள இந்துக்கள் இந்துமதத்தைவிட்டுவேறுமதம்சென்று விட்டால் இந்து மதத்தின் கதி என்னவாகு மென்று யோசியுங்கள். இந்துக்களுக்குஅவ்வளவு மனோதிடமும், தைரியமும், வீரமு மில்லை. நாகபுரியில் 25000 முஸ்லீம்களும், 150000 இதர மதத்தினரு மிருக்கிறார்கள். இருந்த போதிலும் 6-ல் 1 பங்கான முஸ்லீம்கள் நினைத்தபடி யெல்லாம் காரியங்கள் நடந்து வருகின்றன. இனியாவது இந்தியர்கள் தூக்கத்திலிருந்து எழுந்திருக்க வேண்டும்.

**டாக்டர். மூஞ்சே.**

இந்தியாவில் 1915--16 வருஷத்தில் ஜப்பானிலிருந்து 150 கோடி ரூபாய் சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1824—25-ல் 352 கோடி ரூபாய். 1915-ல் ஜப்பான் 5320 லக்ஷம் எண் சாமான்களை இறக்குமதி செய்தது. 1925-ல் 25720 லக்ஷம் எண் சாமான்களை இறக்குமதி செய்தது. இந்தியாவிலிருந்து 1915—16-ல் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1925—26-ல் இது 400 கோடியாக உயர்ந்தது. ஜப்பான் 10 வருஷ காலத்தில் தனது ஏற்றுமதி வியாபாரத்தை 100-க்கு 300 ஆக உயர்த்திக்கொண்டிருக்கையில், இந்தியா வியாபாரம் ஒன்றுக்கு இரண்டானதுடன் நின்று விட்டது. ஜப்பானுடைய ஜனத் தொகை இந்தியாவினுடையதில் ஐந்தில் ஒரு பங்கா யிருந்த போதிலும், இந்தியாவின் முழு ஏற்றுமதியையும் அது பெற்று விட்டது. இந்தியாவின் இயற்கை வசதிகள் ஜப்பானுக் கில்லாவிடினும் இப்படி நேரிட்டதற்குக் காரணம் ஜப்பான் கவர்ன்மெண்டு அனுஷ்டிக்கும் வியாபாரக் கொள்கையே.

**ஸர். இப்ராஹிம் ரஹிம்துலா.**

முடியாசாட்சி தேசத்திற்கு நல்லதா? குடியர சாட்சி நல்லதா? என்பதைப் பற்றி உலக முழுவதும் யோசனை செய்து ஒரு வித முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. முடியரசு நீடிப்பதில்லை. குடியரசு தான் அவசியமென்று தோன்றுகிறபடியால் அதைப் பெறும் வழியாதென்பதை நாம் யோசிக்க வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற்று சுயேச்சையாக இருப்பினும் பாமரர்களைச் சுரண்டி உயர்வாயுள்ளவர்கள் பிழைப்பதென்பது கூடாது. நம் நாட்டில் பிரிட்டிஷார் போனதும் அவர்களைப் போலுள்ள நம் இந்தியர்கள் நம் ஏழைகளை இம்சிக்க வழி இருக்கக் கூடாது.

**பண்டித ஜாவேரிலால் நேரு.**

நாம் தான் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவர்களாகையால் குழந்தைகள் சரியாக நடந்து தாய் மார்களின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் நிலை நாட்டும் வழியில் கொண்டு வர வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளை வளர்ப்பதில் பொறுப்பை யுணர்ந்து நடக்கத் தவறினால் தமக்கும் சமூகத்திற்கும் ஆபத்தேற்படும்.

**ஜானகிபாய் பட்.**

இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஸ்தாபக மடைய வேண்டுமானால், சென்னை மாகாணத்திலுள்ள இந்துக்களாலும், முஸ்லீம்களாலும் தான் உண்டாகும். முஸ்லீம்கள் இஸ்லாத்தைச் சரியாகப் பின் பற்றுபவர்களா யிருந்தால் மகம்மது நபி வாழ்ந்துள்ளவா றிருக்க வேண்டும். முஸ்லீம்கள் யாவரும் தங்கள் ஊற்றார் உறவினர், இதர மதத்தினர் யாவரும் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றிப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மௌல்வி முகமத்ஷாபிதாவூத்.**

ஒவ்வொரு மாணவனும் உண்மை வீரனால் ஒழிய தேசத்திற்கு விடுதலை கிடையாதென்பது நிச்சயம். சமத்துவம் இருந்தாலொழிய தேசம் முன்னேற்றம் ஏற்படாது. மாணவர்கள் ஏழைகள் முன்னேற்றத்தைக் கவனிக்க வேண்டும். அவர்கள் உண்மை தேச பக்தர்களாக விரும்புவார்களாயின் கதருடையே தரிக்க வேண்டும்.

**டாக்டர். பட்டாபி சீதா ராமையர்.**

அறிவின் முடிவு சமூக சேவையே என்ற எண்ணத்தை ஒவ்வொருவர் உள்ளத்திலும குருகுலங்கள் பதியும்படி செய்து வந்தன. குருகுலக் கல்வி முறை திரும்பவும் தேசத்தில் போதிக்கப்படுமாகில், இந்தியா சுயராஜ்யமடையும்படி செய்வதற்கு மிகுதியாய்ப் பயன் பெறு மென்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

**சாது—வாஸ்வானி.**

கூர்க்கர்களுக்குக் கைத் தொழிற் கல்விச் சாலை யொன்றைத் தனியாக ஸ்தாபிக்க வேண்டும். காரக் பகதூர் சிங்கை விடுதலை செய்யக் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**சர்தார் ஜீவன் சிங்.**

வெறும் உத்தியோகத்திற்காகப் படிப்பதையும், பட்டங்களுக்கு ஓடி வரும் வழக்கத்தையும், விவசாயத்தை அலட்சியம் செய்வதையும் விட்டாலொழிய இந்த தொழிலில்லாத கஷ்டம் நீங்கப் போவதில்லை. பிரஜா உற்பத்திசெய்தல் அவசியமா என்பது உலக முழுவதையும் இன்று ஆட்டி வருகிறது. வேலையில்லாமல் திண்டாடும் இக் காலத்தில் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அவசியத்தை ஆட்சேபிப்பார் எவருமில்லை. அதற்காக அனுஷ்டிக்கும் முறைகளைப் பற்றி அபிப்பிராய பேதமிருந்த போதிலும், மகாத்மா காந்தியுள்பட அதன் அவசியத்தை ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே எதிர் காலத்தில் தொழிலில்லாமற் கஷ்டப்படுவதை நிவர்த்திக்க பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது அவசிய மென்று நினைக்கிறேன்.

**டாக்டர். வரதராஜுலு.**

ராஜீய விஷயங்களில் தேசம் முன்னேற்ற மடையா திருப்பதற்கு முக்கிய காரணம் சமூகச் சீர்கேடே. சமூக சீர்திருத்தத்தில் அதிகக் கவனம் செலுத்துவோமாகில், ராஜீயப் பிரசினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அதனால் பலனுண்டாகு மென்பதிற் சந்தேக மில்லை. சாஸ்திரங்கள் போதித்து வரும் மூடக் கொள்கைகளெல்லாம் இப்போது குறைந்து கொண்டே வருவதைக் கண்டு நான் அதிகச் சந்தோஷ மடைகிறேன்.

**ஸர். பி. எம். சித்னவிஸ்.**

இந்தியா தான் மகரிஷிகளின் போதனைகளை உலகுக்கு அறிவிக்க வேண்டும். நம் நாட்டவரிற் பலர் இன்னும் மேல் நாட்டு மோகத்தி லாழ்ந்திருக்கின்றார்கள். ஸ்பெங் கினர் எழுதி யிருக்கும் "மேல் நாட்டின் அழிவு" என்ற புஸ்தகத்தைப் படிக்க அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கில் சூரியன் அஸ்தமித்து விட்டான்; ஆகையால் அவன் கிழக்கி லுதிக்கும் பொழுது வணங்குவதற்கு நாம் தயாராக விருப்போம். உலகிலுள்ள தேசத்தார் அழியாமல் காப்பாற்றும் உணவு இந்தியாவிலிருக்கிறது. வாலிபர்கள் இதை நம்பித் துணிந்து வேலை செய்யுங்கள்.

**சாது—வாஸ்வானி.**

ஆரம்பக் கல்வி இம் மாகாணத்தில் அதிகம் பரவ வேண்டிய அவசியத்தை மாகாணவாசிகளும், சர்க்காரும் உணர்ந்து விட்டனர். தேசவிடுதலையானது கல்வி கற்ற சாதாரண ஆண்கள், பெண்கள், பொது ஜனங்கள் கையிற்றானிருக்கிறதெனக் காலஞ்சென்ற ஸ்ரீ கோபால கிருஷ்ண கோக்லே சொல்லி யிருக்கிறார்.

**திவான்பகதூர்-என். சுப்பராவ்.**

சுதேச சமஸ்தானங்களை ஆண்டு வரும் பல மன்னர்கள் தங்கள் தேசத்திலேயே இருப்பதில்லை. தங்களிடம் குலாமாக விருக்கும் சிலரிடம் ராஜ நிர்வாகத்தை ஒப்புவித்து விட்டு வெளி நாடுகளில் மன்னர்கள் உல்லாசமாகக் காலங்கழித்து வருகின்றனர். இவ்வித குலாம்கள் ஒழிய வேண்டும். மன்னர்கள் செய்து வரும் ராஜரீகத்தை மேற் பார்வை யிடும் பொருட்டு சரியான பிரதிநிதித்வம் பெற்ற ஜனப் பிரதிநிதி சபை ஒன்றிருக்க வேண்டும்.

**என். ஸ்ரீநிவாசய்யங்கார்.**

தற்போது உலகத்தில் பண ஆசையும், குறுகிய நோக்கமும், பகைமையும், பொறாமையும், எல்லாவிதக் கெட்ட குணங்களும் வளர்ந்து உலகத்தையே பாழ் படுத்தி வருகின்றன. மேனாட்டார் உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயாரா யிருக்கின்றனர். இஸ்லாத்திலுள்ள பிரசுரங்களை அங்கு நிறையப் பரப்பினால் பயன்படும். லண்டனில் ஒரு மசூதி கட்ட வேண்டும்.

**லார்டு ஹீட்லி.**

பெண்களுக்கு ஒரு மாதிரியும், ஆண்களுக்கு ஒரு மாதிரியும் ஒழுக்க விதிகள் ஏற்படுத்தி இருப்பதைப் போல் பெண்களைக் கேவலப் படுத்துவது வேறொன்று மில்லை. சில பெண்கள் சுயமரியாதையை இழந்து, கற்பை விற்று ஆண்களின் காம விச்சையைத் தீர்ப்பதற்காகத் தனிப் படுத்தப்பட்டிருக்க வேண்டியது என்ற கொள்கை மிகவும் கேவலமானதாகும். இந்தக் காலத்திலே இந்த வழக்கம் நமது நாகரீகத்துக்குள் பெரிதும் வெட்கமுண்டாக்குவதா யிருக்கிறது. இனி பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம், விபசார வழக்கமாக மாறி விட்டதால் அதை ஆதரிக்கவே முடியாது. ஒரு சாதியார் தான் இம் மாதிரி செய்கிறார்கள். இதி லென்ன விருக்கிறது என்று சொல்லலாம். அது சரியில்லை. ஒரு வகுப்பாருக்குச் செய்யப்பட்ட தீமையின் பலன் தேசம் முழுவதையும் சீர் கெடுப்பதாகும்.

**டாக்டர். முத்துலட்சுமியம்மை.**

ஜனங்களும், தலைதர்களும் சிரத்தை எடுத்துக் கொண்டு வேலை செய்ய முற்பட்டால் ஸ்தல ஸ்தாபனங்களால் விசேஷ நன்மை யுண்டாகும். ஸ்தல ஸ்தாபனங்களே உண்மையான பிரஜா பத்தியத்திற்கு ஊன்று கோல்களாகும். இதைத் தலைவர்கள் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

**டாக்டர். சுப்பராயன்.**

நம் நாட்டில் அநேகர் படிக்கத் தெரிந்தும் சோம்பேறிகளாய்ப் பொழுதைப் போக்குகின்றார்கள். நம் நாட்டு வாசிகள் யாவருக்கும் கட்டாயம் கல்வி போதித்துப் படிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டியது கவர்மெண்டின் கடமையாகும். ஒழிந்த நேரங்களில் புத்தகங்கள் மனதை சாந்தியாகவும், நிம்மதியாகவும், ஆனந்தமாகவும் வைக்க உதவி புரியும்; புத்தியையும் அபிவிருத்திசெய்யும்.

**டாக்டர். பி. பானர்ஜி.**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சென்னை, அகில இந்திய காங்கிரஸ் மகாசபையில் நிறைவேறிய தீர்மானங்கள்.

(முன் தொடர்ச்சி)

12. ஆப்பிரிக்கா இந்தியர்.

தென்னாப்பிரிக்காவில் குடியேறியிருக்கும் இந்தியர்களுக்குப் பரிகாரம் ஏற்பட்டிருப்பதை இந்தக் காங்கிரஸ் ஒப்புக்கொண்ட போதிலும், இண்டோ யூனியன் உடன்படிக்கையானது தென்னாப்பிரிக்கா இந்தியர்களைச் சரியாக நடத்த யூனியன் கவர்ன்மெண்டார் விரும்புகிறார்களென்பதற்கு அறிகுறி யென்று இந்தக் காங்கிரஸ் கருதியபோதிலும் யூனியனில் ஓட்டுச் சுதந்திரமுள்ள ஏனைய பிரஜைகளுக்குச் சரி சமத்துவமான சுதந்திரத்தை இந்தியர்களுக்குக் கொடுத்தாலன்றி திருப்தி யடைய முடியாதென்று இக் காங்கிரஸ் அபிப்பிராயப்பட்டு, வகுப்புவாரிச் சட்டங்களையும், முக்கியமாக நிற வேற்றுமைச் சட்டத்தையும், ஹோட்டல்களில் இந்தியர்கள் வெயிட்டர்களாக இருக்க முடியாதபடி சாராய மசோதாவில் இருக்கும் பிரிவையும், நில விற்பனை மசோதாவில் ஜாதி வேற்றுமை சம்பந்தமான பிரிவையும் எடுத்து இரு தேசங்களுக்கும் ஏற்பட்டுள்ள நல்லுணர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்று யூனியன் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது.

தென்னாப்பிரிக்காவிலும் கீழ் ஆப்பிரிக்காவிலும் இருக்கும் இந்தியர்களுடைய நிலைமையை உயர்த்தும் ஜீவகாருண்ய வேலையில் ஈடுபட்டிருந்த தீனபந்து ஆண்டிரூவின் அரிய ஊழியத்தை இக்காங்கிரஸ் பாராட்டுகிறது.

இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவமில்லாமல் கிழக் காப்பிரிக்கா கமிஷனை நியமித்திருப்பதையும், ஜனப் பிரதிநிதியின் ஆட்சியை ஏற்படுத்துவதாக வேஷம் போட்டுக் கொண்டு அங்கு சமீபத்தில் குடியேறியுள்ள ஐரோப்பியர்களுக்கு ஒன்றும் தெரியாத தேசங்களைத் தங்களுக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ளவும், இம்சையினாலும், ஜாதி வேற்றுமைச் சட்டங்களிலும் சமாதானமாக வாழ்ந்து வரும் இந்தியர்களைத் துன்பப்படுத்தவும், வெள்ளையர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கும் உத்தேசமிருந்து வருவதையும் இந்தக் காங்கிரஸ் அழுத்தமாகக் கண்டிக்கிறது.

தங்கனீகாவிலுள்ள மேட்டுப் பாங்கான பிரதேசங்களை ஐரோப்பியர்களுக்கென ஒதுக்கிச் சர்வ தேசச் சங்கக் கட்டளையை மீறி நடக்கக் கூடச் சமீபத்தில் சாத்தியமாக இருப்பதை சர்வ தேச சங்கத்தின் அறிவிப்புக்கு இம் மகாநாடு கொண்டுவருகிறது.

கையிரோயிபிலும், மாம்பாஸாவிலும் ஐரோப்பியர்களுக்கு அவர்களுடைய தகுதிக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கிடைக்கும் வண்ணம் ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமாக மாத்திரம் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட்டு இருப்பதை இக் காங்கிரஸ் கண்டித்து தங்களுக்குரிய அந்தஸ்து கிடைக்கும் வரை கிழக் காப்பிரிக்கா இந்தியர்கள் போராடுவார்களென்று இக் காங்கிரஸ் எதிர்பார்க்கிறது.

13. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

1. பொதுத் தேர்தல் தொகுதிகள்.

வருங் காலத்தில் இந்தியாவுக்கு ஏற்படுத்தப்படும் ராஜீய அமைப்புக்கான எந்த திட்டத்திலும், மாகாண சட்டசபைகள், மத்திய சட்டசபை ஆகிய இவற்றிலுள்ள பிரதிநிதி ஸ்தானங்களுக்குரிய தேர்தல்கள் எல்லாம் பொதுத் தேர்தல் தொகுதிகளின் மூலமாகவே நடைபெறும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல்.

இந்தியாவிலுள்ள இரு பெரும் சமுகங்களான இந்து முஸ்லீம் சமூகங்களுக்குரிய நியாயமான உரிமைகள் யாவும் சட்டசபைகளின் மூலமாகப் பூர்ணமாகப் பாதுகாக்கப்படும் என்றும், மேலும் அந்த சமுகங்கள் விரும்பும் பக்ஷத்தில் அந்தந்த மாகாணத்திலுள்ள ஜனத் தொகையில் அந்தந்த சமூகத்துக்குள்ள வீதாசாரப்படி ஏற்படும் ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம் என்றும், அந்த சமுகங்களுக்கு காங்கிரஸ் மகாசபை உறுதி கூறுவதற்கு அறிகுறியாகப் பின்வருமாறு ஏற்பாடு செய்யப்படும்:—ஜனத் தொகையில் குறைந்து அதனுல் மைனாரிட்டியாக உள்ள சமூகங்களுக்கு ஜனத் தொகை வீதாசாரப்படி கிடைக்கக் கூடிய ஸ்தானங்களை விட சில அதிகமான ஸ்தானங்கள் பரஸ்பர சம்மதத்தின் பேரில் அளிக்கப்படலாம். மாகாணங்களில் எந்த வீதாசாரப்படி ஹிந்து முஸ்லீம் ஸ்தானங்கள் நிர்ணயிக்கப்படுகின்றனவோ அந்தவீதாசாரப்படியே மத்திய சட்டசபையில் அந்த சமுகங்களுக்குரிய ஸ்தானங்களும் நிர்ணயிக்கப்படும்.

(3) a. வடமேற்கு மாகாணமும், பிரிட்டிஷ் பெலுஜிஸ்தானமும்.

இந்தியாவின் இதர மாகாணங்களில் புதிய சீர்திருத்தங்களின் பலனுக ஏற்பட்டுள்ள சட்ட சபைகளைப் போன்ற சட்டசபைகள் வடமேற்கு மாகாணத்திலும், பிரிட்டிஷ் பெலுஜி ஸ்தானத்திலும் ஏற்பட வேண்டுமென்று முஸ்லீம் தலைவர்கள் செய்து கொண்டுள்ள கோரிக்கையானது நியாயமானதாக இருப்பதால், அக் கோரிக்கை கூடிய சீக்கிரம் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டிய தவசியமே. ஆனல் புதிய சீர்திருத்தங்களை அங்கு அமுலுக்குக் கொண்டுவருகிற அதே சமயத்தில், நேர்மையான நீதி பரிபாலனத்துக்குரிய ஏற்பாடுகளையும் அங்கு உடனுக்குடன் செய்து விட வேண்டும்.

b. பம்பாய் மாகாணத்திலிருந்து ஸிந்துப் பிரதேசத்தைப் பிரித்துவிடுதல்.

1. ஸிந்துப் பிரதேசத்தை பம்பாய் மாகாணத்திலிருந்து பிரித்து விட வேண்டுமென்கிற விஷயத்தை யோசிக்குமிடத்து, மாகாணங்களை யெல்லாம் பாஷாவாரியாகப் பிரித்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் அமைப்பு விதிகளில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் யோசனைகளை அமுலுக்குக் கொண்டு வர வேண்டிய பக்குவ காலம் வந்து விட்டதென்று கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

2. மாகாணங்களை மேற் கண்ட முறைப்படி திருத்தி யமைக்கும் வேலை உடனே தொடங்கப்பட வேண்டும். தனி மாகாணம் வேண்டுமென்று கேட்கும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் மேற் கண்ட நியதியின் பேரில் தனி அமைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

3. ப்ரஷா வாரியாக மாகாணப் பிரிவினை செய்வதைத் தொடங்கி விட்டதற்கு அறிகுறியாக, ஆந்திரா, ஹிந்து, கர்நாடகம் ஆகிய பிரதேசங்களைத் தனித் தனி மாகாணங்களாக ஆக்கிவிட வேண்டும்.

4. சிந்தனை சுதந்திரமும் மத வழிபாட்டுச் சுதந்திரமும்:— மனச் சாட்சியின்படி தீர்மானிக்கப்படும் சிந்தனை சுதந்திரத்தையும், மத வழிபாட்டு சுதந்திரத்தையும் பாதிக்கக் கூடிய எவ்வித மான சட்டத்தையும் மத்திய சட்டசபையாவது, மாகாண சட்டசபைகளாவது எந்நாளும் செய்யக் கூடாது.

[சிந்தனை சுதந்திரம், மத வழிபாட்டு சுதந்திரம் என்ருல், மத நம்பிக்கை, மதப் பிரார்த்தனை, மதச் சடங்குகள் முதலியவைகளின் சுதந்திரமும், மதக் கல்வியைப் புரப்பும் சுதந்திரமும், பிற மதஸ்தர்களுக்கு இடையூறில்லாமல் செய்யப்படும் மதப் பிரசார சுதந்திரமுமாகும்].

சமுக விஷயங்கள்.

ஒரு சமுகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளில் முக்கால் வாசிப் பேர்களால் ஆக்ஷேபிக்கப்படும் எந்தப் பிரேரணை, மசோதா, அல்லது தீர்மானங்களையும் எந்தக் சட்டசபையிலும் கொண்டு வரக் கூடாது. மத சம்பந்தமான விஷயங்கள் எவை என்பதை ஒவ்வொரு சட்டசபையும் கூடுவதற்கு முன்பாக ஹிந்து முஸ்லீம் பிரதிநிதிகளைக் கொண்ட சாஸ்வதக் கமிட்டியைக் கொண்டு முடிவு செய்து கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

இரண்டாவது பிரிவு.

ஹிந்துக்கள் தங்களுக்கு இஷ்டமான இடத்தில் வாத்தியம் வாசிக்கவும், ஊர்வலங்களை நடத்தவும் கொண்டாடும் பாத்தியங்களுக்கும் முஸ்லிம்கள் குர்பானிக்காகவும், ஆகாரத்திற்காகவும் பசுவை வதை செய்யக் கொண்டாடும் பாத்தியங்களுக்கும் எவ்வித விக்கினமுமின்றி பசுக்கள் விஷயத்தில் முஸ்லீம்கள் ஹிந்துக்கள் உணர்ச்சியை சாத்தியமான வரையில் மதிக்க வேண்டுமென்று முஸ்லீம்களையும், ஹிந்துக்கள் மசூதிமுன் மேளம் வாசிக்கும் விஷயத்தில் முஸ்லீம்களுடைய உணர்ச்சியை சாத்தியமான வரை மதிக்க வேண்டுமென்று ஹிந்துக்களையும் வேண்டிக் கொள்ள வேண்டும்.

பலாத்காரத்தினுலாவது, நீதிஸ்தலங்கள் மூலமாவது எந்த சமுகத்தினர் கொண்டாடும் பாத்தியதையையும் மற்றொரு சமுகத்தினர் எதிர்க்கக் கூடாதென்று காங்கிரஸானது கேட்டுக் கொள்ளுகிறது.

மூன்றாவது பிரிவு.

1. மத மாற்றுதல்:— நியாயமான போதனைகளைச் செய்து ஒருவனை மத மாற்றிக் கொள்ள எந்த நபருக்கும், எந்த சமுகத்துக்கும் உரிமையுண்டு. பலாத்காரத்தை உபயோகித்தும், ஏமாற்றியும், தகாத முறைகளைக் கையாடியும், கைப் பொருள் கொடுத்தும் ஒருவனை எந்த நபரும், எந்த வகுப்பும் மத மாற்றுதல் செய்யக் கூடாது. மேலும், அங்ஙனம் நடப்பதையும் தடுக்க வேண்டும். 18 வயதுக்குக் கீழ்பட்டவர்களை, அவர்களுடைய பெற்றோர் அல்லது கார்டியன்களுடனல்லாது தனியாக மத மாற்றக் கூடாது. மேலும் தாய் தகப்பனில்லாமல் அநாதையாக விடப்பட்ட சிறுவர்களை அவர்களுடைய சொந்த மதத்தினரிடம் ஒப்படைத்து விட வேண்டும். மத மாற்றும் விஷயத்தில் எதையும் ரகசியமாகச்செய்யக் கூடாது. மத மாற்றி விட்டதை உத்தேசித்து கொண்டாட்டங்கள் நடத்துவது கூடாது.

ரகசியமாகவோ, பலாத்காரத்தைக் கொண்டோ ஒருவன் மத மாற்றப்பட்டதாக எங்கேனும் புகார் ஏற்பட்டால், அதைக் காரியக் கமிட்டியாரால் நியமிக்கப்படும் மத்தியஸ்தர்களைக் கொண்டு தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் தீர்மானித்திருக்கிருர்கள்.

(2) பசு பலி, மசூதி முன் மேளம் வாசித்தல்:—பசுக் குர்பானி சம்பந்தமாகவும், மசூதி முன் மேளம் வாசிப்பதன் சம்பந்தமாகவுமுள்ள இரு சமுகங்களுக்கு முள்ள முரண்பட்ட கொள்கைகளைச் சமரசம் செய்யும் நோக்கத்துடன் கீழ்க் கண்ட தீர்மானத்தைக் காங்கிரஸ் மகாசபை அங்கீகரிப்பதுடன், அத் தீர்மானத்தில் கண்ட விஷயங்களைப் பற்றி ஜனங்களிடத்தில் நன்கு பிரசாரம் செய்யும்படி ஒவ்வொரு காங்கிரஸ்காரரையும் வேண்டிக் கொள்கின்றது. மேலும், இங்ஙனம் பிரசாரம் செய்வதற்கென்றே ஒரு சப் கமிட்டியை நியமிக்கும்படி காரியக் கமிட்டியை வேண்டுகின்றது. மேலும், இத் தீர்மானத்தைச் சென்னையில் கூடவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்திலும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திலும் ஆஜர் செய்து மீண்டும் ஆலோசனைக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் தீர்மானிக்கின்றது.

தீர்மானம்:—எந்த சமுகமும் தனது மத சம்பந்தமான கொள்கைகளையும், அனுஷ்டானங்களையும் இன்னொரு சமுகத்தின் மீது சுமத்துவது கூடாதாகையாலும், மத சம்பந்தமான கொள்கைகளும், அனுஷ்டானங்களும் பொது ஜன அமைதிக்குப் பங்கமில்லாதவாறு பாது காக்கப்பட வேண்டியது அவசியமாக இருப்பதாலும் ஹிந்துக்கள் எந்த மசூதியின் வழியாகவும் மத சம்பந்தமான ஊர்வலங்களையும், இதர ஊர்வலங்களையும் நடத்திச் செல்லவும், மேள வாத்தியங்களை வாசிக்கவும் உரிமையுண்டு. ஆனல் மசூதியின் முன்பாக ஊர்வலத்தை நிறுத்திக் கொண்டு ஆரவாரம் செய்வதும், மசூதிக்குள் பிரார்த்தனை செய்யும் முஸ்லிம்களுடைய தொழுகைக்கு இடைஞ்சல் ஏற்படும்படியான காரியத்தைச் செய்வதும் கூடாது.

முஸ்லிம்கள் எந்தக் கிராமத்திலும் பட்டணத்திலும் குர்பானியினிமித்தமாகவும், ஆகாரத்திற்காகவும், பசுக்கொலை செய்ய உரிமையுண்டு. ஆனல் பொது இடங்களிலும், ஆலயங்களுக்குச் சமீபமான இடங்களிலும், ஹிந்துக்களுடைய பார்வைக்கு உட்பட்ட இடங்களிலும் அங்ஙனம் பசு பலி செய்தல் கூடாது. பசு பலி விஷயத்தில் ஹிந்துக்களுக்குள்ள ஆழ்ந்த மத உணர்ச்சியைப் பாராட்டி முஸ்லீம்கள் எந்த இடத்திலும் ஹிந்துக்களுடைய மனதைப் புண்படுத்தும்படியான வழியில் பசு பலி செய்யாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தீர்மானத்துக்கு விரோதமாகக் காரியங்கள் நடந்ததாக எங்கேனும் புகார் ஏற்படுமானல், அந்தப் புகார்களைக் காரியக் கமிட்டியாரால் நியமிக்கப்படும் மத்தியஸ்தர்களைக் கொண்டு பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். மத்தியஸ்தர்களுடைய தீர்ப்பே இது விஷயத்தில் முடிவானதாகக் கொள்ளப்பட வேண்டும்.

## புலாலுண் அபாயம்.

இராமநாதபுரம் ஜில்லா, முதுகுளத்தூருக்கடுத்து $1\frac{1}{2}$ மைலுக்குக் கிழக்கேயுள்ள நரசிங்கங் கூட்டமென்னும் சிறிய கிராமத்தில் கோவிந்தக் கோனர் என்பவர் வீட்டில் ஒருசெம்மறியாடுக்கு 2நாட்களாக முகத்தில் ஒரு பருவு உண்டாகியிருந்து 30—12—27ல் அது இறந்துவிட்டது. அதன் மாமிசத்தை அக்கோனருள்பட அவர் வீட்டிலிருந்த ஆண், பெண், குழந்தைகள் ஆக 7—பேர்கள் தின்ருர்கள். உடனே அந்த 7 பேர்களுக்கும் டி பருவு அவர்களுடைய முகத்தில் உண்டாகி, 1-1-28-ல் கோவிந்தக் கோனர் இறந்து போனர். மற்ற 6—பேர்களும் மரணத்தை எதிர் நோக்கினவர்களாய் இருக்கிருர்கள். வைத்திய சிகிச்சை செய்யப்பட்டுவருகிறது. புலாலுண்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாகும்.

சந்திரசேகரன்,
கடலாடி.

## தக்ஷணமாற நாடார்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சின்னமனூரில் தக்ஷணமாற நாடார்களுக்குச் சொந்தமான பேட்டையில் முன் கட்டடம் ஐந்தாறு வருடகாலமாய் முற்றுப்பெற்ற பாடொழிந்து அரைகுறையாய்க் கிடந்து வருவது பெருங் குறையாய்த் தோற்றுகிறது. அப்பேட்டையின் பண்டில் பணம் இருப்பின்மையால் கட்டிமுடிக்க இயலவில்லை. இக்குறை தவிர்க்க வேறு ஊர்களிலுறை தக்ஷணமாறநாடார்கள் யாரும் இதுவரை முன் வந்திலர். இப்பரா முகம் விசனிக்கத் தக்கதாகும். ஆகையால் அவர்கள் இனி யேனும் அபிமானமேலீடு கொண்டு இப்பேட்டைக் கட்டடத்தைக் கட்டிமுடிக்க முன்வர வேண்டுகிறோம்.

சு. பு. மா. வெள்ளையாநாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சுத்த ஆராதனை செய்யுங்கள்.

### கோயில் தர்ம கர்த்தர்கள் கருணைபுரிய வேண்டும்.

சிறு தெய்வங்கட்கு உயிர்ப் பலியிடுங் கொடுமை, நம்முடைய நாட்டிலே பெரிதும் பெருகி வருகின்றது. எள்ளளவும் இரக்க மின்றி எல்லோரும் சிறு தெய்வங்களின் பெயரைச் சொல்லி ஏராளமான ஆட்டுக் குட்டிகளையும், சூலாடுகளையும், கோழிகளையும், பன்றிகளையும், எருமைகளேயும் அநியாயமாக வெட்டி வீழ்த்துகின்றார்கள். அந்தோ! கொடுமை !! கொடுமை !!! ஒரு தெய்வ சந்நிதானத்திலே, வீணைகத் தெய்வத்தின் மேற் பழியைச் சுமத்திவிட்டு, ஆடு கோழிகளை அறுத்து அவித்துத் தின்பதைப் போற் கொடிய பாவம் வேறொன்றுண்டோ? எந்தப் பாவத்தைப் போக்கிக் கொண்டாலும், இக் கொடிய பாவத்தை எப்பொழுதாவது போக்கிக் கொள்ள முடியுமா? அறிவிலாத கீழ் மக்களைப் பின் பற்றி அறிவுடையாரும் இத் தீச் செயலைச் செய்யலாமா? இவ்வாறு உயிர்க் கொலை புரிந்து அசுத்த ஆராதனை செய்யும்படி நம்முடைய இன்றமிழ் நூல்களிலே எங்காவது சொல்லப்பட்டிருக்கின்றதா? இல்லையே! எல்லா நூல்களும், தெய்வ வழிபாட்டினைப் பற்றிக் கூறும்பொழுது, அபிஷேகம், புஷ்பாலங்காரம், தேங்காய் பழம், அன்ன நைவேத்யம் முதலியவைகளைப் பற்றியே யன்றோ சிறப்பித்துக் கூறுகின்றன. பின்னர் இத் தீய வழக்கம் எப்படித் தோன்றி யிருக்கின்றது? கள்ளும் ஊனும் விரும்பும் கீழ் மக்கள் தாம் உண்பனவற்றைத் தமது சிறு தெய்வங்களுக்கும் வைத்துப் படைத்து மகிழ்கின்றார்கள். வீண் பயங்கொண்டு அறிவுடையாரும் இக் கொடுமையினைப் புரிவதுதான் பேராச்சிரியமாக விருக்கின்றது. தெய்வ வழிபாட்டிற்கு ஒரு பச்சிலையாவது, பழம், போதாவது இருந்தாற் போதும். அன்பு ஒன்று தான் பிரதானமாக இருத்தல் வேண்டும். ஆகவே, அன்பர்களனைவரும் எந்தக் கோயிலிலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஏழை உயிர்களை வதைக்காது, சுத்த ஆராதனையே செய்து சுகமாக வாழ்வார்களாக.

### திருக்கோயில் தருமகர்த்தர்களே!

உங்கள் பரிபாலனத்தில் உள்ள திருக்கோயில்களில் திருவிழாவில் தேரோட்டும் பொழுது தேர்க்காலில் பலியிடும் பசலை ஆட்டுக்குட்டி களிடத்துக் கருணை புரியுங்கள்.

அருள் வடிவமாக விளங்கும் ஆண்டவன், எல்லா உயிர்களும் இனிது வாழ்ந்து உய்யத் திருவீதியில் தர்மமாகிய தேரின் மீது திருவுலா வரும் பொழுது, அவர் முன்னரேயே அவருடைய அருமைக் குழந்தைகளாகிய ஆட்டுக்குட்டிகளை அறுப்பது அநியாயமில்லையா?

தேரோடும் திருவீதி முழுவதும் தேவார திருவாசகாதி அருட்பா மணங் கமழ வேண்டியதிருக்க, அவ்விடத்தில் இரத்தக் கவிச்சி வீசும்படி செய்யலாமா? மற்றும் உத்தமராகிய பூஜகர்களும் அவ்வாட்டின் முகத்தில் மஞ்சள், குங்குமம் சாத்தி, அதை அறுக்கும்படி உத்தரவு கொடுக்கலாமா?

ஐயோ! வாயில்லாத ஏழைப் பிராணிகளிடத்து இரக்கங் காட்டுதலாகாதா? தேர்க்காலில் தேங்காய்களையும் பூசணிக்காய்களையும் உடைத்தாற் பத்தாதா?

அன்பர்களே! அற்பர்கள் கூறும் காரணங்களைக் கவனியாதீர்கள். ஆட்டுக் குட்டிகளை அலற அலற அறுக்காதீர்கள். கருணை புரியுங்கள்.

ஹிந்து மதாபிமான சங்கம்,

காரைக்குடி.

---

## நட்பு.

இம் மா நிலத்தின் கண் வாழும் ஜீவராசிகளுக்கெல்லாம் இன்றியமையாதிருக்க வேண்டிய ஓர் சிறந்த லட்சணம் நட்பெனப்படும். நட்பானது நற்பூபோன்று வாசனை கமழ்ந்துகொண்டிருக்க வேண்டும். தேனீயானது இனிய தேனைச் சேகரிப்பதற்கு எங்கே பூ இருக்கின்றதோவெனத் தேடிக்கண்டுபிடித்து ரீங்காரம் செய்து கொண்டுஎவ்விதம்தேன் சேர்க்கின்றதோ, அவ்விதமே ஆறறிவுவாய்ந்த மானிடர்களாகிய நாமும் நட்புடையாரைத் தேடி சமாதானத்துடன் ஜீவிக்க முயல வேண்டும். இது காரணம் பற்றியே, கொன்றை வேந்தனில் "நட்பை நாடு" என எழுதியுள்ளார். நட்பென்னும் சிறந்த குணமுடையோரில்லத்தில் நீதியின் சூரியன் பிரகாசிக்கும். துன்பம், துக்கம் அணுவளவேனும் அணுகா. எவ்வளவு பேதங்களிருப்பினும் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கிவிடு மென்பதை நள்ளிருளில் தெரிகின்ற மின்மினிப் பூச்சிகளைப் போன்றறியலாம்.

இதில் முக நட்பு எனவும் அகநட்பு எனவும் இருவகைப்படும். கண்ணுக்கெதிரில் ஒரு பேச்சும், காணு இடத்திலொன்றும், மனதிலொன்றும், பேச்சிலொன்றும் வைத்துக் கொண்டு,கண்டமாத்திரத்தில் மிஸ்டர் என்றும், வாருங்கள் இருங்கள் எனவும் நளினமாக முகஸ்துதி பேசுங்குணமுடைத்திருத்தலே முக நட்பெனப்படும். இவ்வித நட்பு நட்பல்ல. இதற்காகவே,

"முக நகநட்பது நட்பன்று—நெஞ்சத்
தகநகநட்பதே நட்பு"

என்றனர் பொய்யா மொழியார். ஆகையால் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள விதமாக அக நட்புடையவர்களாயிருப்பவர்களே நட்புடையோராவர்.

இன்னல் நேரிடும் சமயங்களில்உதவி செய்தலும், துன்மார்க்க நெறியிற்பட்டுழலாவண்ணம் சன்மார்க்கநெறிகளைப் போதிப்பித்து வழிநடத்தலும், மற்றவர்களுக்கு நேரிடும் துன்பங்கள் தனக்கேயென எண்ணித்தனதுயிரையொரு பொருட்டென நினையாமல் அத்துன்பங்களைத்தான் அனுபவித்தும், உடலிரண்டே யன்றி உயிரும் உணர்ச்சியும் ஒன்றேயென மதித்தும், இன்பதுன்பங்களைத்தான் அனுபவிப்பதுமே அக நட்பெனப்படும்.

"உடுக்கையிழந்தவன் கைபோலுமாங்கே
யிடுக்கண்களை வதாநட்பு"

என்ற திருக்குறளின் கருத்தை யுணர்க.

"நட்டாரெனப்படுவர் நாடுங்கால் [வையத்துப்
பட்டாம் பல பிறப்புத்துன்ப மென்— [றெட்டி
யறநெறி கைவிடா தாசாரங் காட்டிப்
பிறநெறி போக்கிற்பவர்"

என்பது நந்தமிழ் மறையின் ஓர் விளக்கம்.நட்பைக் காப்பாற்றுவதற்கு பொறுமை அவசியம். "யானைக்கும் அடிபிசகும்" என்றவாறு நட்புடையோரும் தவறுவர். ஒருவர் அவ்விதம் தவறின் மற்றவர் அதைப் பொறுத்துக் கொண்டால் அவரது தவறுதல் மாறும். பின் இருபேர்களும் முன்னைவிட இணைபிரியா நேசர்களாகிவிடலாம். இதனுல் தான் "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்னப்பட்டது. ஆகையால் நாம் இவ்விதப் பொறுமையை அணியாக அணிந்து நட்பென்னும் மலரைச்சூடி நற்கதியென்னும் அந்நகரைச் சேர முயலுவோமாக. "நட்பை நல்குகஎன்று". இவ்விதச் சிறந்ததோர் குணத்தை புவியோர்களுக் கருளுமாறு இறைவனையனுதினமும் இறைஞ்சுவோமாக.

பி. பா. யோ. செல்லையா நாடார்.

---

குற்றங்கள் வைக்கோல் துரும்புகளைப்போல் மேலே வீசுகின்றன. முத்துகளைத் தேட விரும்புவோன் அதிக ஆழத்தில் முழுக வேண்டும்.

---

## மக்டோனல்டின் மணிமொழிகள்.

மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மக்டோனல்டு "இந்தியாவின் விழிப்பு" என்ற ஓர் புஸ்தகம் எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தினின்று ஸர். பி. வி. ராய் சில குறிப்புகள் எடுத்து எழுதி வைத்திருக்கிறார். அவை எல்லோருக்கும் தெரிய வேண்டுவன வாதலால் அவற்றை மீண்டு வெளியிடுகிறோம்.

அப்பர் பர்மாவைக் கைப்பற்றிய செலவு இந்தியர்களின் மீது சுமத்தப் பட்டிருக்கிறது. இதற்கு நியாயமான முகாந்தரம் கிடையவே கிடையாது. இச்செயல் இயம்பொணு இழிவு வாய்ந்தது. இந்திய ராணுவச் செலவில் 10-ல் 9 பங்கு ஏகாதிபத்தியத்திற்காகவே செலவழிக்கப்படுகிறது.

கல்விக்காக 15 லட்சத்துக்குச் சிறிது அதிகமே செலவழிக்கப்படுகிறது. இது நகைப்பிற்கிடமானதே யன்றி வேறல்ல. நாம் இந்தியாவின் வரும்படியில் அளவுக்கு மிஞ்சியபாகத்தை ஏகாதிபத்திய காரியங்களுக்கே செலவிடுகிறோம். நாம் இந்தியாவின் அபிவிருத்திக்காகச் செய்யும் செலவோ மிகச் சொற்பமானது.

வரி முறையின் கடுமை ஜனங்களை வருத்துகிறது, பஞ்சம் நேரிடும் போது ஜனங்கள் பட்டினி கிடக்கின்றனர். லக்ஷோ பலக்ஷம் பேர் தேகபலமிழக்கின்றனர். இருப்புப் பாதைகள் கஷ்டத்தை அதிகப்படுத்தி இருக்கின்றன. அதிகமான இடங்களில் பஞ்ச முண்டாகும்படி செய்திருக்கின்றன.

நெருப்பைப்போல் தகிக்கும் கொடுமையான வெயிலைப்போல் ஒரே யொரு வியாபாரச் சங்கம் இந்தியரின் சாரத்தை உறிஞ்சி விடுகிறது. தூசியையும் வரட்சியையுமே விட்டுவைக்கிறது.

இந்தியாவில் கதிரறுவடைக்கு இரண்டொரு வாரங்களுக்குப்பின் மீதியாயிருக்கும் கோதுமை அரிசி முதலியன வியாபாரிகள் (ஏற்றுமதிக் காரர்கள்) கையிற் போய்விடுகின்றன. மறுவருடமும் மழையில்லாது போய் விட்டால் ஜனங்கள் பட்டினி கிடக்கின்றனர்—இஃது மேல் நாடு கீழ்நாடுகளில் இழைக்கும் குற்றமாகும்.

நமது ஆட்சி பணம் கடன் கொடுப்பவர்களையும் தானியம் சேர்த்து வைப்பவர்களையும் தமது சுய நலத்திற்காக மற்றவர்களை சுயராஜ்ஜிதப்படுத்தும்படி செய்திருக்கிறது.

பொய்க் கல்வியின் பயனுய் நியாயவாதிகள் (லாயர்கள்) பெருகுகின்றனர். ஒன்றுந் தெரியாத ஜனங்கள் கோர்ட்டுகளிற் சூழ்கின்றனர். அங்கு லாயர்கள் குமஸ்தாக்கள் முதலிய கொள்ளைக்கூட்டத்தார் அவர்களை உரித்து விடுகிறார்கள்.

ஸர். தாமஸ் மனரோ இதன் சம்பந்தமாய் சொல்வதாவது, மான வழக்கை உடைய ஒருவன் பஞ்சாயத்தில் தனது வழக்கைத் தீர்த்துக்கொள்ள அதிக விருப்பமுடையவனு யிருக்கிறுன். ஆனுல் நியாயமான வழக்காளி கோர்ட்டுத் தீர்மானத்தையே அதிகமாக வேண்டுகிறுன். ஏனெனில் பஞ்சாயத்தார் எளிதில் வழக்கின் உண்மையை அறிந்து கொள்வார்கள்.

இந்தியாவின் ஜனங்கள் சுயேச்சையுள்ள பிரஜைகளாயில்லாமல் கீழ்ப்படியும் குடிகளாய் விட்டனர்.

புரட்சி இயக்கத்தின் பொறுப்பைப் பற்றி ஸ்ரீ மக்டோனல்டு 1909-ல் எழுதும்போது குறிப்பிட்டதாவது:—இந்தியா ஜனங்கள் உலகத்திலேயே சிறந்த சுறு சுறுப்பு வாய்ந்தவர்கள். அவர்களது நிலத்தில் பெரும்பாகம் செழிப்பாக விருக்கின்றது. அதிக தானியங்கள் விளைகின்றன. பஞ்சம் நேரிடும் போது, அவர்கள் பட்டினி கிடந்து ஆயிரக்கணக்காக இறக்கின்றனர். 4 கோடி இந்தியர்கள் போதுமான உணவின்றி இருக்கின்றனரென, ஸர். வில்லியம் ஹாண்டர் கூறினர். வேளாண்மை செய்வோரில் பாதிப் பேர் வருடமுழுதும் வயிறார உண்பதில்லை என்று ஸர். சார்லஸ் எலியட் கூறினர்.

ஆங்கில நாகரீகத்தைப் பற்றி ஸ்ரீ மக்டோனல்டு கூறியதாவது:— நாம் பழைய சமூக பொருளாதாரக் கட்டுப்பாட்டை அழித்து விட்டோம், நாம் அதனை மீண்டும் ஒழுங்காயமைக்க முடியாது. நாம் அதற்கு பதிலாக வேறெதனையு மமைப்பதிலும் சித்தி பெறவில்லை.

இந்தியன் ஆங்கிலமயமாக ஆகமுடியாது. இதுவுமன்றி இக்காலத்தில் ஆங்கிலமயமாக முயற்சித்தால் தாழ்ந்த நிலமையை யடைவதை யொக்கும். நமது பிரதிநிதிகளின் கடமை குடிகளுடன் நெருங்கிப் பழக வேண்டியதே. நாம் இந்தியருடைய புழக்க வழக்கங்களுக்கு இடங்கொடாத வரையில் எந்த நீடித்த நன்மையையும் இந்தியாவிற் செய்யமுடியாது. நாம் அதை விட்டு முற்றும் வெளிப்பட வேண்டியதே.

ஆங்கிலோ இந்தியர்களை இந்தியா விஷயங்களைப் பற்றி அவர்களுடைய அபிப்பிராயங் கேட்டால் அவர்கள் யாராவது கூட்டங்கூடிப் பேசியதையோ, அல்லது பத்திரிகையிற் கூறியிருப்பதையோ தான் கிளிப்பிள்ளை போல் திரும்பவுஞ் சொல்கின்றனர். நான் லண்டனிலிருப்பதால் இந்தியாவிலிருந்து எவ்வளவு தூரம் பிரிந்திருக்கின்றேனோ அதே யளவே இவ்வாங்கிலோ இந்தியர்களும் இந்தியாவிலிருந்து பிரிந்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீ மக்டோனல்டு இந்தியாவிற்கு விஜயம் செய்து அநுபவ பூர்வமாய் தாம் கண்டறிந்த உண்மைகளை விஸ்தரிக்கும்போது பின்வருமாறு கூறுகிறார்:—நான் கல்கத்தாவிலிருந்த கடைசி நாளன்று இந்தியாவின் ஆச்சரியகரமான வாழ்க்கை என் மனதிற்கு தோற்றமானது. நமது ஆட்சி, பாவில் நாளி போடுவது போலவும் மேகத்திலிருந்து பூமியைப் பிரகாசிக்கச் செய்யும் மின்னலைப் போலவும் மறைந்து போக புராதன இந்தியா யுகங்கள்தோறும் வாழ்ந்து வருவது போல் எனக்குத் தோற்றமானது. இந்த தேசமும் அதன் ஜனங்களும் எவ்வளவு பயத்தை யுண்டாக்கக் கூடியவர்களாயிருக்கின்றனர்! நாம் இத்தேசத்தில் வாசஞ்செய்வது எவ்வளவு சொற்பகாலமாய் தோன்றுகிறது! நமது சிறந்த செயல்களும் நீடிக்கக் கூடியவையா யிருக்கின்றனவா? இல்லை இல்லை. நமது நல்ல அரசாங்கத்தை ஒரு புரட்சி புதைத்துவிடக் கூடும். சூரியன் புல்லைக் காய்வதுபோல் ஒரு தெய்வீகப் புரட்சி நமது லௌகிகக் காரியங்களை யழித்து விடக்கூடும். நாம் இந்தியாவைப் பின் பற்றும்படியாக அதற்குக் கற்பித்திருப்பதெல்லாம் மாயையேயன்றி வேறென்ன? நாம் அதைத் தேடச் சொல்லும் செல்வம் மண்ணும் சாம்பலுமாகுமே யொழிய வேறெதுவுமாகுமா?

குறிப்பு:—ஸ்ரீமாக்டோனல்டு பிரதம மந்திரியாக இருந்தவர். இவர் உண்மையோடு இந்தியாவையும் அதன் ஜனங்களையும் நேசிப்பவர். பிரிட்டிஷ் ஆட்சியே தமக்குப்பிடித்த மில்லாமல் உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டவர். இவர்போன்ற உண்மையானவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் பெரும் உத்தியோகத்தில் இருந்திருப்பின் இந்தியா இவ்வளவு கஷ்ட நிலை அடைந்திருக்க மாட்டாது என்பதற்கு அவரது மணிமொழிகளே தக்க சான்றாகும். தற்பொழுதுள்ள பிரதம மந்திரி இந்தியாவைப் பற்றியும் இந்தியரைப் பற்றியும் நினைப்பதே யில்லை. இவரைப் போன்றவர்களையே நமது வெள்ளை சர்க்கார் விரும்பும்.

"தேசோபகாரி".

Tamil Heritage Foundation International Digital Library EBook collection